www.padippakam.com


# நற்றமிழ்

விலை உரு 6.00 இலக்கிய இலக்கணத் திங்களிதழ்

தோள்கள் உடையவர்கள் ஒன்றுபடுங்கள்-புதுத்
தோற்றம் விழைபவர்கள் ஒன்றுபடுங்கள் - அறிஞர் சாலை இளந்திரையனார்

ஆண்டு-௬ திங்கள்-௪ தி.ஆ.உ0௩௭ மேழம் (சித்திரை) (15-4-2006)

ஆசிரியர் : 'தமிழ்மாமணி' புலவர் மு. இறைவிழியன்

இணையாசிரியர்கள் : புலவர் அரங்க. நடராசன், புலவர் செ. இராமலிங்கன்


## கம்பன் மணிமண்டபம்



புதுச்சேரியில் கம்பன் கழகத்தார் உருவாக்கிய கம்பன் மணிமண்டபத்தை 27.02.2006இல் புதுவை மாநில முதல்வர் மாண்புமிகு **ந. அரங்கசாமி** திறந்துவைத்தார். கம்பன் கழகத் தலைவர் தமிழ்மாமணி புரவலர் **ந. கோவிந்தசாமி**, துணைத்தலைவர் **க. முத்துக்கருப்பன்**, பொருளாளர் புரவலர் **வேல். சொக்கநாதன்**, செயலாளர் வழக்கறிஞர் **தி. முருகேசன்** இணைச் செயலாளர் **கி. கலியாணசுந்தரம்** ஆகியோர் உடன் உள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



# தேர்தல் வருகிறது தேர்ந்து வாக்களிப்பீர்!

உலகில் உள்ள எல்லா நாடுகளின் அரசுகளும் தம் தாய் மொழியைப் பேணும் பொறுப்பை ஏற்றுள்ளன. அதனைக் கண்ணாகக் காத்து வளர்த்து வருகின்றன. ஒரு நாட்டின் உயிர் போன்றது தாய்மொழி. அதனால் தான் இயல்பாகவே நாடுகள் தாய்மொழியைப் பேணுகின்றன.

இந்திய நாட்டிலும் எல்லா மாநிலங்களிலும் அவரவர் தாய்மொழி சிறப்பாகக் காத்து வளர்க்கப்படுகின்றன. ஆனால் தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலம் ஆகிய இரண்டு பகுதிகளில் மட்டும் உள்ள அரசுகள் தாய்மொழியைக் காத்து வளர்க்க முனையாதது மட்டுமன்று எவ்வளவு இழிவுபடுத்த முடியுமோ அவ்வளவும் செய்கின்றன. தாய்மொழி வளர்ச்சிக்கான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. என்றாலும் அவற்றை நடைமுறைப்படுத்துதலின்று. எந்தத்துறையிலும் தமிழ்வளர்ச்சி யடைந்திலது.

ஆங்கிலக் கல்வி பெருகிவிட்டதால் சிறுவர்களுக்குத் தமிழே தெரியாத நிலை ஏற்பட்டுவிட்டது. அன்று சமற்கிருதத்தால் மிதிக்கப்பட்ட தமிழ் இன்று ஆங்கிலத்தாலும் இந்தியாலும் மிதிக்கப்படுகிறது. ஆட்சிகள் நடக்கின்றன. அமைச்சர்கள் உலா வருகின்றனர். சட்டமன்ற உறுப்பினர்கள் நடமாடுகின்றனர். ஆனால் தாய்மொழி வளர்ச்சிக்கு அணுவளவும் பயன்விளைந்திலது. மாறாக அதனை வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்தும் பணிகட்குத் துணைபோகின்றனர்.

எனவே பாதிப்புக்காளான மக்கள்தாம் தம் தாய் மொழி வளர்ச்சிக்கு வழிகாணுதல் வேண்டும். தேர்தல் வருகிறது. கவர்ச்சி மிக்க வாக்குறுதிகளை வழங்குவர் அரசியல் வணிகர்கள். அவர்களிடம் வினவுக. “தாய்மொழி வளர்ச்சிக்கு என்ன கொள்கை வகுத்துள்ளீர்” என்று. எம்பிள்ளைகட்குத் தாய்மொழிக் கல்வி வேண்டும். பணித் தேர்வுகளிலும் தமிழே இருத்தல் வேண்டும். இவற்றை ஏற்போருக்கே எமது வாக்கு என அறிவிக்க உமது கருத்தை உணர்ந்து ஏற்றுச் செயல்படுத்துவார் என நம்புவோர்க்கே உமது வாக்கை அளித்திடுக.

- ஆசிரியர்

## புலவர் அரங்க. சேசாசலம் (பணிக்குன்றன்) பரிசு பெற்றார்

‘பன்மலர்’இதழ் நடத்திய கட்டுரைப் போட்டியில் நற்றமிழன்பர் புலவர் அரங்க. சேசாசலம் (பணிக்குன்றன்) இசக்கியம்மாள் பகவதி நினைவுப் பரிசான முதற்பரிசினைப் பெற்றுள்ளார். பரிசுபெற்ற புலவரை நற்றமிழ் வாழ்த்துகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# கலிப்பாப் பற்றித் தொல்காப்பியர் கூறுவன

கலைமாமணி நூற்கடல் தி.வே. கோபாலய்யர் (தொடர்ச்சி)

ஒருபொருள் நுதலிய வெள்ளடி இயலான்
திரிபுஇன்றி வருவது கலிவெண் பாட்டே - 153

கலித்தொகையில் கலிவெண்பாட்டுக்கள் எட்டு உள்ளன.

இடுமுள் நெடுவேலி (கலி 12 ) -19 அடி
அரும்பொருள் வேம்கையின் ( கலி -18 ) -12 அடி
நெஞ்சு நடுக்குற (கலி -24 ) -17 அடி
மரையா மரல் கவர (கலி 6 ) -11 அடி
சுடர்த்தொடிஇ கேளாய் (கலி -51 ) -16 அடி
கயமலர் உண்கண்ணாய் (கலி -37 ) -22 அடி
தீம்பால் கறந்த (கலி 111) -24 அடி
திருந்திழாய் கேளாய் (கலி -65) -29 அடி

இவற்றுள் 12, 65, 111, என்ற எண்ணுடையன தளைவிரவியன. ஏனைய ஐந்தும் வேற்றுத்தளை விரவாதன. இக்கலிவெண்பா அடுக்கியும் சுரிதகம் முதலிய உறுப்பொடு கூடியும் வரின் அவை எல்லாம் கொச்சகக்கலியின் பாற்படும்.

முதல் உறுப்பாகிய தரவும் இறுதி உறுப்பாகிய சுரிதகமும் இடைநிலைப் பாட்டு என்னும் தாழிசையும் இடைமிடைந்தும், ஐஞ்சீராய் அடுக்கிய அடியும், தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்பும் பெற்றும் வெண்பாவிற்கு உரிய நடையான் செவ்விதின் தோன்றும் பாநிலையையும் அவற்றின் வகையினையும் உடையபாடல் கொச்சகக்கலி என்னும் கலிப்பா வகையைச் சார்ந்தது.

இங்ஙனம் உறுப்புக்கள் மிக்கும் குறைந்தும் மயங்கியும் வரினும் பொருளாலும் ஓசையாலும் உறுப்பாலும் இப்பாடல் கொச்சகக்கலி என்பது வெளிப்படையாக விளங்கித் தோன்றும். கொச்சக ஒருபோகு தெற்றென விளக்கமாகத் தோன்றாது.

தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்
ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும்
வெண்:பா இயலான் வெளிப்படத் தோன்றும்
பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூல்நவில் புலவர் நுவன்று அறைந்தனரே - 154

இந்நூற்பாவின் முதல் மூன்று அடிகளைத் தனியே பிரித்து ஒருநூற்பாவாக்கி அது விரவுறுப்புடைய கலிவெண்பாப் பற்றியது என்று கொண்டு, தரவுக்கும் சுரிதகத்துக்கும் இடையே ஐஞ்சீர் அறுசீர் அடுக்கியும் அடுக்காமலும் வேற்றுத்தளை விரவியும் விரவாமலும் வரும் குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டும் அமைந்துள்ள கலிப்பாக்களை விரவுறுப்புடைய கலிவெண்பா எனவும் அவற்றுள் இடையே ஐஞ்சிரடி, நாற்சீரடி, கொச்சகம் முதலியன வரின் அவை கொச்சகக்கலி எனவும் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளனர். கொச்சகம்

www.padippakam.com



வெண்பாவாகவும் வரும் என்றும் அவர்களே குறிப்பிடுகின்றனர். விரவுறுப்புடைய கலிவெண்பா என்ற கருத்து மயக்கம் தருவதாகவே உள்ளது. இந்நூற்பாவை ஒன்றாகவேகொண்டு இது கொச்சகக்கலியின் இலக்கணம் என்று கொள்வதே தெளிவான கருத்தாக உள்ளது.

கொச்சகக்கலிக்கு ஓதியவாறன்றி ஒருவர் ஒன்றனைச் செப்புதலும் மற்றவர் அதற்கு மறுமாற்றம் கூறுதலுமாகிய நேர்க்கூற்றுக்கள் இடையிடையே தொகுக்கப்பட்டுச் சுரிதகமின்றிப் பொருந்தும் பிற உறுப்புக்களால் ஆகிவரும் கலிப்பா உறழ்கலி எனப்படும். சிறுபான்மை சுரிதகம் வருமேனும் அது சுரிதகத்தின் பொருண்மையை முற்றமுடியாது நிற்கும்.

**கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்**
**போக்கு இன்றாதல் உறழ்கலிக்கு இயல்பே - 155**

சுணங்கு அணிவனமுலை (கலி 60) போக்கு இல்க்கணம் இல்லாச் சுரிதகம் பெற்றது.

ஒருஉ நீ எங்கூந்தல் (கலி 87) தரவும் போக்கும் இன்றி வந்தது.

நலம்மிக நந்திய (கலி 113) போக்கு இலக்கணம் இல்லா ஆசிரியச்சுரிதகம் பெற்றது. அரி நீர் கவிழ் நிலம் (கலி 91) ஐஞ்சீர் அடுக்கியும் ஆறுமெய் பெற்றும் வந்து போக்கின்றி உற்ற உறழ்கலி.

வாரி நெறிப்பட்டு (கலி 114) மறுமாற்றமின்றிக் கூற்றுடைய உறழ்கலி.

**நாடக வக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்**
**கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**
**உரியது ஆகும் என்மனார் புலவர் - 53**

என்பதனால் புலனெறி வழக்கமாகிய அகப்பெருட்குக் கலிப்பாவே சிறந்தது என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

தொல்காப்பியத்தில் வெண்பா நெடுவெண்பாட்டு குறுவெண் பாட்டு எனப்பகுக்கப்பட்டு அவற்றிற்குப் பேரெல்லையும் சிற்றெல்லையும் குறிப்பிடப்பட்டிருத்தல் காண்கிறோம்.

**நெடுவெண் பாட்டு முந்நால் அடித்தே**
**குறுவெண் பாட்டின் அளவு எழு சீரே - 157**

நெடுவெண்பாட்டின் உயர்எல்லை ஏழடி. குறுவெண்பாட்டில் கீழ்எல்லை இரண்டடி. நெடுவெண்பாட்டு 5, 6, 7 அடிகளான் வரும். குறுவெண்பாட்டு 2,3 அடிகளான் வரும். அளவியல் வெண்பா நான்கு அடியான் வரும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகைகளுள் வெண்பாவால் ஆகிய தொகை ஒன்றும் இல்லை. கலித்தொகையிலேயே கொச்சகக் கலியுள் பலதிறப்பட்ட வெண்பாக்களைக் காண்கிறோம். நேரிசை வெண்பா என்பது ஒன்று தொல்காப்பியத்தில் இடம்பெற வில்லை. கலித்தொகையில் காணப்படும் கொச்சகவெண்பாக்களே எட்டுத் தொகையில் காணும் வெண்பாக்கள். இவற்றிற்குச் சற்றுப் பிற்பட்டுத் திருக்குறளும் முத்தொள்ளாயிரமும் தோன்றின போலும். - தொடரும்.

www.padippakam.com



# மண்ணுலக வாழ்வு : வள்ளுவரும் பிளேட்டோவும்

முனைவர் ப. மருதநாயகம், இயக்குநர்,
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

(தொடர்ச்சி)

பிளேடோவின் எண்ணத்தின்படி, இறப்பென்பது உடலிலிருந்து ஆன்மா பெறும் விடுதலையாகும்.

> ஒரு தத்துவஞானி உடலை மதிப்பதில்லை; மாறாக
> அதனைக் கேவலமாகக் கருதுகிறான், அவனது
> ஆன்மா உடலிலிருந்து வெளியே ஓடியவுடன்
> தனிமையையே பெரிதும் விரும்புகிறது. (பிளேடோ 224)

“மெனோ” எனும் உரையாடலில் பிளேடோ நல்ல பண்பாட்டை, அறத்தை ஒருவர்க்குச் சொல்லித்தர முடியாதென்றும் நாம் கற்பது என்பது ஏற்கனவே அறிந்திருந்த ஒன்றை நினைவு கூர்தலே என்றும் பேசுவார்.

> ஆன்மா அமரத்துவம் உடையதாக இருப்பதாலும்
> பலமுறை பிறவி யெடுத்திருப்பதாலும், இங்கிருப்பன,
> கீழ்உலகத்திலிருப்பன அகிய எல்லாவற்றையும்
> பார்த்திருப்பதாலும் அவை எல்லாம்
> பற்றிய அறிவு அதற்கு உண்டு. எனவே அந்த ஆன்மா
> அறம்பற்றியும் மற்றவை பற்றியும் அது அறிந்திருந்த
> எல்லாவற்றையும் மீண்டும் தன் நினைவிற்குக் கொண்டு
> வருதல் அதனால் முடியுமென்பது வியப்புக்குரியதன்று.
> (பிளேடோ 180)

இக்கருத்துகளில் சில “பீடோ” எனும் உரையாடலில் மேலும் அழுத்தமாகவும் உறுதியோடும் கூறப்படுகின்றன.

> மரணமே எல்லாவற்றிற்கும் முடிவானால்,
> கயவர்கள் இறப்பினால் நலனடைந்தவராவார். ஏனெனில்
> அவர்கள் தங்கள் உடல்களிலிருந்தும் ஆன்மாக்களிலிருந்தும்
> தீவினைகளிலிருந்தும் விடுபட்டோராவர். ஆனால்
> ஆன்மாவிற்கு மரணம் இல்லையென்பதால், தீவினை
> யிலிருந்தும் அவர்களுக்கு விடுதலையில்லை. கீழை
> உலகப்பயணத்தின்போது, ஆன்மா தான் கற்றதையும்
> பெற்றபயிற்சியையும் உடன் எடுத்துச் சொல்வதால்,
> பயணத்தின் தொடக்கத்தில் அங்கு அவை நன்மையையோ
> தீமையையோ இறந்தவர்களுக்குச் செய்கின்றன.
> (பிளேடோ 246)

www.padippakam.com



ஆன்மா தெய்வத்தைப்போல் மரணமற்றது, அறிவு சார்ந்தது, ஒரு சீரானது, கரைந்துவிடாதது, மாற்றமுறாதது. உடல் மனிதத் தன்மை கொண்டது, அழியக்கூடியது, அறிவு சாராதது, பலவகை வடிவம் பெறுவது, கரையும் தன்மையது, மாற்றத்திற்கு உட்பட்டது. உடலும் ஆன்மாவும் இணையும்போது இயற்கை ஆன்மாவைக் கட்டளையிட்டு ஆட்சி செய்யுமாறும் உடலைப்பணிவோடு சேவை செய்யுமாறும் ஆணையிடுகின்றது. (பிளேடோ 232)

இவையெல்லாம் கிரேக்க அறிஞர் ஆன்மாவிற்கும் உடலுக்கும் உள்ள உறவு பற்றியும் வேற்றுமைகள் பற்றியும் கூறும் கருத்துகள்.

இறப்பிற்குப்பின்னுள்ள வாழ்வு, பலபிறவிகள், பிறவித்தளையி லிருந்து விடுபட மாந்தனின் முயற்சி ஆகியவை பற்றிப் பேசும் குறள்கள் பல.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு. (338)

புலன்களைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியதன் இன்றியமை யாமையையும் அறிவாற்றலால் இதனைச் செய்ய முடியுமென்பதையும் வள்ளுவரும் குறிப்பிடுகின்றார்.

உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து. (24)

பிளேடோவைப்போலவே ஒருவர் ஒரு பிறவியில் பெற்ற அறிவு ஏனைய பிறவிகளுக்கும் தொடர்கிறது எனும் கருத்தையும் வள்ளுவர் சுட்டுகிறார்.

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து. (398)

நல்வினையும் தீவினையும் ஏழு பிறவிகளுக்கும் தொடரும் என்ற நம்பிக்கையும் குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

எழு பிறப்பும் தீயவை தீண்டா பழி பிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். (62)

மரபுவழிவந்த ஏழு பிறவிகள் பற்றிய எண்ணத்தை அறிவிக்கும் குறள்கள் இருப்பினும் வள்ளுவர் இறப்பிற்குப்பின் நிகழ்வனயாவை என்பதில் பிளேடோ போல் ஈடுபாடு காட்டவில்லை; அவற்றை நிரல்படக் கற்பனை செய்து கூறவும் இல்லை. ஆனால் பிளேடோவின் ஏர் (Er) பற்றிய தொன்மம் ஆன்மாவின் நீண்ட பயணம் பற்றியும் இந்த அண்டத்தின் அமைப்புப்பற்றியும் ஐயுறவு ஊகங்களை அறிவியலாரால் மெய்ப்பிக்கப் பட்ட உண்மைகளைப்போல் தருகின்றது. பிளேடோ பேசும் கோள வடிவமான அண்டத்தின் சுற்றெல்லையில் நிலையாயிருக்கும் விண் மீன்கள் கிழக்கிலிருந்து மேற்கிற்கு 24 மணிநேரத்தில் சுற்றுகின்றன. உலகில் உள்ள எல்லாப்பொருள்களும் இச்சுழற்சியில் எடுத்துச் செல்லப்படுகின்றன. அண்டத்தின் மையத்திலிருக்கும் மண்ணுலகம் அதற்கும் அண்டத்திற்கும் பொதுவான அச்சில் நாள்தோறும் சுழல்கிறது. இது அண்டத்தின் சுழற்சிக்கு எதிர்த்திசையில் இருப்பதால் உலகம் அசைவின்றி விண்வெளியில் நிற்க, ஏனைய கோளங்களெல்லாம் அதனைச் சுற்றுகின்றன. (கார்ன்போர்டு 349-50)

- (தொடரும்)

www.padippakam.com



# ஆசிரிய ஆசிரியைகளே, மாணவ மாணவியர்களே சகோதர சகோதரிகளே

உங்கள் எல்லார்க்கும் வணக்கம். இத்தகைய வாசகங்களை இன்று மேடைகளிலும் அறிவிப்பு வாசகங்களிலும் இதழ்க் கட்டுரை களிலும் காணலாம். இவை மேடையில் உதிர்க்கப்பட்டவையே! அவை பின்னர் இதழிலும் ஏட்டிலும் ஏறிக்கொண்டன. இவற்றில் உள்ள தவறுகளை யாரும் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. கல்லாதார், அரைகுறையாகக் கற்றார், நன்கு படித்தவர் அனைவர்தம் எழுத்திலும் பேச்சிலும் இவைஆட்டம் போடுகின்றன.

ஆசிரியன் : ஆண்பால், ஆசிரியை : பெண்பால், ஆசிரியர் : பாலர்பால். 'ஆசிரியர்' ஒருவர்க்கு மேற்பட்டவரைக் குறிக்கும் சொல் அக்குழுவில், ஆண் ஆசிரியப்பெருமக்கள் மட்டுமே இருக்கலாம்; பெண்டிர் மட்டுமே இருக்கலாம்; ஆணும் பெண்ணும் அஃதாவது ஆசிரிய ஆடவரும் ஆசிரியமகளிரும் சேர்ந்திருக்கலாம். ஆக, 'ஆசிரியர்' என்பது பன்மைச்சொல்; பலர்பாற்சொல்; உயர்திணைச்சொல். ஒருமை எண்ணுக்குரிய ஒரே ஒருவரைக் குறிப்பிடுவதற்கும் 'ஆசிரியர்' என்னும் அச்சொல் பயன்படுகின்றது. இங்கு, 'ஆசிரியர்' என்பது உயர்வுநோக்கிய பன்மை ஆகும். 'அவன்' என்பதற்கும் 'அவள்' என்பதற்கும் 'அவர்' என்பது பலர்பால் என்பதனை ஈண்டுநினைவிற்கொள்ளல் வேண்டும்.

'அவன்கள்' என்பதும் அவள்கள்' என்பதும் பிழையான வடிவங்கள் என்பதை உலகம் புரிந்திருக்கின்றது. எனினும் 'அவர்கள்' என்பதும் பிழையான வடிவம் என்பதனை இன்னும் முழுமையாக உலகம் உணரவில்லை. 'ஆசிரியன்கள்' என்றோ 'ஆசிரியைகள்' என்றோ குறிப்பிடலும் தவறான வடிவங்களே! 'ஆசிரியர்' என்பதே பன்மையையும் பலர்பாலையும் உணர்ந்துவதுதான். 'கள்' விகுதியை உயர்திணைப் பன்மையில் (அவர், ஆசிரியர் என்பவற்றில்) ஏற்றிக் கூறல் இயல்புக்கு அப்பாற்பட்டதாகும். அர்: பலர்பால் விகுதிகள்: பன்மை விகுதி. ஆயினும் இதுபலவின்பால் விகுதி. 'கள்' என்றும் நமக்குத் தேவயில்லை. அஃது அஃறிணைக்கு உரியதே! அந்த 'கள்' இன்று உயர் திணையின்மேல் ஏற்றப்படுகின்றது.

'ஆசிரியப்பணி', 'ஆசிரியத்துறை' என்னும் தொடர்களில் 'ஆசிரிய' என்பது அடைமொழியாகும். 'ஆசிரிய ஆசிரியைகளே' 'ஆசிரிய ஆசிரியர்களே' என்பவற்றில் உள்ள 'ஆசிரிய' என்னும் பெயர் அடை மொழி 'ஆசிரியத்தன்மையுடைய' என்னும் பொருளில் அமைகின்றது. அப்படியெனில், ஆசிரியத்தன்மை யில்லாத ஆசிரியப்பெருமக்களும் உண்டு என்று ஆசிரிய குலத்தையே இழிவுபடுத்துவதாகின்றது. எனவே,

www.padippakam.com



'ஆசிரிய ஆசிரியைகளே', என்பனபோன்ற தொடர்களில் மூவகைப் பிழைகள் முளைத்தெழுகின்றன. இங்கு மூவகைக் குழப்பங்களுங்கூட முளைக்கின்றன.

சகோதரன், சகோதரி தமிழ்ச்சொற்களே அல்ல. மாணவ மாணவியர் என்பதில் ஒருபுதுவகைக் குழப்பம். தொழுவூர் வேலாயுத முதலியார் தம் நூலில் 'மாணவி' என்னும் சொல்லைக்கூட ஏற்கவில்லை. 'மாணவி' என்பதற்கு மாண்பினை அவிப்பவள் என்னும் பொருள் உண்டு எனவும் மாணவன் இருப்பினும் மாணாக்கன், மாணாக்கி என்னும் சொற்களைக் கையாளுதலே சாலச்சிறந்தது எனக் கூறுகின்றார். இவற்றிற்கு 'மாண்பினை ஆக்குபவன்' என்றும் 'மாண்பினை ஆக்குபவள்' என்றும் பொருள் என்றும் எனவே, இனி இவற்றையே பயன்படுத்துவோம் என்றும் அவர் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே கூறியுள்ளார்.

சகோதர சகோதரிகளைவிட்டு 'அண்ணன் தம்பியர்' என்றும் 'அக்காள் தங்கையர்' என்றும் கூறலாம்.

"இவை பழக்கத்தில் வந்துவிட்டன. என்செய்வது, எப்படித் தவிர்ப்பது?" எனச்சிலர் வினவுதல் கூடும். 'பழையன கழிதலும் புதியன புகுதலும் தவறுகள் அல்ல. (நன் 422) ஆயினும் தீமைசெய்யும் தவறுகளை நீக்கத்தான் வேண்டும் நன்மை செய்யும் பழையனவற்றை நாம் கல்நெஞ்சத்தோடு புறக்கணிக்கின்றோமே! இதுமுறையானதா? இயல்பாகக் கழிந்துபோகக்கூடியவற்றை வலிந்து கழித்தல் கூடாது.

எனவே, புத்துணர்வும் வேண்டும்; பழமை உணர்வும் வேண்டும். இரண்டுமே, நமக்கு நல்வழிகாட்டும். எல்லாம் நாம் முறைப்படிக் கையாளுவதில் பயன்படுத்துவதில் பேணிப்போற்றுதலில் உள்ளன.

- நா. தண்டபாணி, அம்பல்.

## பொறிஞர் அகனாரின் மடல்

வணங்கி மகிழ்கின்றேன் வாழிய நலனே! மீனம் நற்றமிழ் பெற்று மகிழ்ந்தேன் 'ஒளி தோன்றிவிட்டது; வழி பிறந்து விடும்' - என்ற தங்களின் கணித்துரையின் படியே நிகழ்ந்திடத் தமிழம்மை அருளீவார்! என் தமிழரண் பாவாணர் மன்றத்திற்குத் தங்களின் வாழ்த்துரை ஊக்கியாகத் திகழ்கின்றது.

25.1.06 - தமிழ்ப்போர் ஈகியரின் நாளன்று கால்கோள் இடப்பட்டுக் கட்டடப்பணிகள் நடந்துவருகின்றன! மீனத்திற்குள் முடியும் மேழத்தில் திறப்பு! தாங்கள் நேரில் வருகைதந்து வாழ்த்த வேண்டும். நாளும் பொழுதும் பின்னர் தெரிவிப்பேன்.

படிப்பகம்

www.padippakam.com



# கருப்புநிற வெள்ளைக்காரன்!

கருப்புநிற வெள்ளைக்காரன் வருகிறானடா!
கைதூக்கிக் "குட்மார்னிங்" சொல்கிறானடா!
உருப்படியாய்த் தமிழில்பேச மறுக்கிறானடா;
ஊறிக் கொட்டும் ஆங்கிலத்தில் ஒட்டைநூறடா!

ஆங்கிலத்தைப் பிழையில்லாமல் பேசல்அறியான்;
அழகான மொழிநடையும் எழுதல் அறியான்.
ஆங்கிலத்தைக் கட்டிக்கொண்டே அழுகிறானடா!
அன்னைத் தமிழ் விட்டதனைத் தொழுகிறானடா!

தன்மொழியில் ஒப்பமிட மறுக்கிறானடா!
தமிழனோடு தமிழ்ல்பேசல் வெறுக்கிறானடா!
என்னஇதில் பொருத்தம்? அட! ஒன்றுமில்லையே.
இவன் மூளை அடிமைமூளை! வேறொன்றில்லையே.

இந்த மண்ணின் மொழியை இவன் புறக்கணிக்கிறான்.
ஏதிலாரைப் போற்றித் தாயை அவமதிக்கிறான்.
வெந்தும்வேகா ஆங்கிலத்தில் பெருமைகொள்கிறான்
வியன்தமிழின் முதன்மைஇவன் புரிய மறுக்கிறான்!

சொந்த மண்ணில், சொந்தமக்கள் நடுவில் வாழ்கிறான்
சுரணையின்றி அயல்மொழியில் கல்விதருகிறான்
எந்தவகை தேவைஇது? நினைக்கிலானடா!
இவன்போலும் படித்தமுட்டாள் எங்குள்ளானடா?

- பேராசிரியர் **ம.இலெ. தங்கப்பா**

www.padippakam.com



# பிறந்தகத்திற்கு அனுப்பிவிடுங்களேன்!

பலமகளிரும் விரும்பி நீராடும் அழகான குளிர்ந்த பொய்கையைப் போல் பலர்க்கும் பயன்படும் எம்அன்பரே!

நீண்டநேரம் நீரில் மூழ்கி விளையாடினால் சிவக்காத கண்களும் சிவந்துவிடும்; அந்தக் கண்கள் ஒளிவீசும் விளக்கைக் காணக் கூசும்; இருளில் இருக்கவே விரும்பும்.

நீண்டநேரம் மிகமிக இனிக்கின்ற தேனை மிகுதியாகச் சுவைத்தவர் வாய்க்கு அந்த உயர்ந்த தேனும் புளிக்கத்தான் செய்யும்; அந்த வாய், கசப்பை உண்ணத்தான் தூண்டும் (வீட்டிற்கு விளக்காகவும், சுவைக்குத்தேனாகவும் இருப்பவள் தலைவி என்பதும், இருளும், கைப்புச் சுவையுமானவள் பரத்தை என்பதும் குறிப்புப்பொருட்கள்)

எங்கள் ஊரில், அச்சமூட்டும் பாம்பு திரியும் எங்கள் தெருவில் பலரும் கண்டு அஞ்சி நடுங்கும் பாம்பொன்று எங்களை நோக்கி ஊர்ந்துவந்த போது, நாங்கள் அதனைக் கண்டு அஞ்சினோம்; உடல் நடுங்கி, மனம் வருந்திச் செய்வதறியாது திகைத்து நின்றோம் அப்போது. அந்தப் பாம்பினால் உண்டாகும் தீங்கு, தனக்கு நேர்ந்தாலும் நேரட்டும், எங்களுக்கு நேரக்கூடாதென்று கருதி, விரைந்துவந்து, எங்கள் இடர்தீர்க்க, அந்தப் பாம்பினின்றும் எங்களைக் காப்பாற்றினீர்கள் அல்லவா?

அவ்வாறு உதவிய நீங்கள், இப்போது எம்மைப் பாராமலும், எம்மொடுங் கூடியிராமலும் பிரிந்தேயிருப் பீர்களென்றால் எங்களைப் பிறந்தகத்திற்கு அழைத்துச் சென்று விட்டுவிடுங்களேன்!

நீர்நீடு ஆடின் கண்ணுஞ் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயிற் றேனும் புளிக்கும்
தணந்தனை யாயின்எம் இல்லுய்த்துக் கொடுமோ
அந்தண் பொய்கை எந்தை எம்மூர்க்
கடும் பாம்பு வழங்குந் தெருவில்
நடுங்கஞர் எவ்வம் களைந்த எம்மே.

(குறுந்தொகை 354. கயத்தூர் கிழானார்)

(பரத்தையிற் பிரிந்து வாயில்வேண்டிச் சென்ற தலை மகற்குத் தோழி வாயில் மறுத்தது)

- புலவர் அரங்க. நடராசன்

## வாழ்த்துகிறோம்

27-3-2006 அன்று மு. வேங்கடாசலம் அவரது துணைவியார் [illegible] அமிர்தம் ஆகியோர் இலண்டன், பாரிசு, அமெரிக்கா, கனடா ஆகிய [illegible]களுக்குக் கல்விச்சுற்றுலா சென்றனர். அவர்கள் நலமுடன் சென்றுவர வாழ்த்துகிறோம்.

- ஆசிரியர்

www.padippakam.com



## பாவலர் இதயகீதனாரின் மடல்

'தமிழ்மாமணி' விருது தாங்களிடம் வந்தமர்ந்துள்ளது; தாமதம் என்றாலும் எனது வாழ்த்தை பாராட்டை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

விருது கருதித்தமிழ்ப்பணி ஆற்றியவர் இல்லை. தமிழ் உயர்வுக்காக அர்ப்பணிக்கும் உங்கள் அருங்குணத்தை போராடும் போர்க்குணத்தை மாற்றுச் சங்கம் என மறுக்காது தமிழுக்கு யார் போராடினாலும் அவர்களோடு இணையும் மாப்பண்பைத் தில்லியில் கண்டேன். தமுசெ 'உயர்தனிச் செம்மொழிக்காகத்' தில்லியில் நடத்திய போராட்டத்தில் தாங்கள் களவீரராய்த் திகழ்ந்தது என் மனக்கண் முன் நிழலாடுகிறது.

நற்றமிழ் மூலம் நான்காம் தமிழ்ச்சங்கப் பணி தொய்வின்றித் தொடர்கிறது. புதுக்கவிதை புற்றீசல் கூட்டத்திலிடையே தமிழ்ப்பா தேனீக்களை நாளும் வளர்த்து வருகிறீர்கள் 'தமிழ்மாமணி விருது' உங்கள் தமிழ்த்தொண்டிற்கு அரசின் சிறு அங்கீகாரம் அவ்வளவே இன்னும் பல உயரிய விருதுகளையும், புகழையும் தமிழ்ச் சமுகம் தங்களுக்கு வழங்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. புதுவை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பொறுப்பாளர்கள் திசம்பர் 17,18 தேதிகளில் தங்களுக்குப் பாராட்டினை தெரிவிக்க இல்லம் வந்தார்கள்.

'தமுசெ மாநிலக் குழுவில்' வைத்து தங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்திடத் திட்டமிட்டிருந்தோம். நீங்கள் ஊரில் இல்லாததால் நடத்த முடியவில்லை திருவள்ளுவர் மன்றச் செயலர் தம்பி இளங்குமரன் பரிசுப் பொருள் ஒன்று கொடுத்திருந்தார். அதை நான் தங்களிடம் சேர்க்க இயலாமல் போய்விட்டது. நானும் நேரில் புதுவையில் தங்களைச் சந்தித்து பாராட்டும் வாழ்த்தும் சொல்ல வந்திருந்தேன் அதுவும் இயலாமல் போய் விட்டது. அதனால் தான் இவ்வளவு தாமதம்.

புதுவையின் உயர் தமிழ்விருது மட்டுமல்ல தமிழகத்தின் இந்தியா வில் (தமிழ்) உலகத்தின் விருதுகளும் உங்களிடம் தேடி வரும். எனது வாழ்த்தை அன்பை உள்ளத்து மகிழ்ச்சியை மீண்டும் தெரிவிக்கிறோம்.

நீங்கள் நலத்தோடும், வலத்தோடும் தமிழ்த்தொண்டு புரிய பல்லாண்டு பல்லாண்டு வாழ்க.

---

## கருத்தரங்கம்

1) கலிப்பா பற்றித் தொல்காப்பியர் கூறுவன என்ற தொடர் கட்டுரை எளிய நடையில், எடுத்துக்காட்டுகளுடன் இருத்தல் வேண்டும். அடக்கியல், அடிநிமிர்ந்து, வாரம் (152) முதலியவற்றை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கினால் தெளிவாயிருக்கும்.

2) 'வாரம்' என்ற சொல் வருதல் என்ற பொருளில் இலக்கியங்களில் வந்திருப்பின் எடுத்துக்காட்டுதர வேண்டுகிறேன், அதற்கு உறுப்பிலக் கணத்தையும் தரவேண்டுகிறேன்.

- மாசில் மகிழ்நன், ச. மு. விமலானந்தன்.

www.padippakam.com



## இறைவிழியனார்க்குப் பாராட்டு

நற்றமி ழாசிரியர் பெருந்தகை நீவிர்
நாடாளும் மன்னவர்போல் ஏடாளும் மன்னவரே;
தமிழ்மாமணி விருதினைநீர் பெற்றதனால் அவ்விருது
பெரும்பேறு பெற்றதெனில் மிகையாகா தய்யனே!

- கவிஞர் பா. விசயகுமார், சென்னை.

---

தாங்கள் புதுச்சேரி மாநிலத்தின் பெரிய விருதான "தமிழ்மாமணி" பெற்றமை குறித்து எனது வாழ்த்தையும், மகிழ்வையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தங்கள் உழைப்பால் உயர்வீர்! மேலும் பல விருதுகளைப் பெறுக!

- காரை மு. வேங்கடசலனார்.

---

இனிக்கின்ற செந்தமிழாம் கழைச்சாற் றோடே
இன்சுவைத்தேன் கற்கண்டு பாகும் சேர்த்து
நனியார்வத் துடிப்போடே எங்கட் கெல்லாம்
நாணாளும் ஊட்டியேநல் மொழிப்பற் றோங்கக்
கனிவோடு தொண்டாற்றும் அய்யா! நீவிர்
கண்டுகேட்டும் உணர்ந்துமேதான் மகிழும் வண்ணம்
தனிப்புகழாம் "தமிழ்மாமணி" விருது பெற்றீர்!
"தண்டமிழாய் வாழ்க" அய்யா! வாழ்த்துகின்றேன்!

- பாவலர் கருவூர்ப் பாரி, கரூர்.

---

## இனமானப்புலவர் இடிமுரசார் பார்வையில் இறைவிழியனார்!

அறிவாசான் அய்யா, அவர்களுக்கு வணக்கம் பல... வாழிய நலனே! "தமிழ்மாமணி" நற்றமிழ் ஆசிரியர் புலவர் மு. இறைவிழியனார் "வாழ்வும், பணியும்" என்னும் அரிய நூல் (18-03-2006)இல் கிடைக்கப்பெற்றுப் பெருமகிழ்வு எய்தினேன். இந்நூல் சீரிய முறையில் நன்கு தயாரிக்கப்பட்டு வரலாற்றுப் பேழையாக, ஒளிர்வது கண்டு வியந்தேன். தொகுப்பாளர்களின் நன்முயற்சி பாராட்டத்தக்கதே! கவிஞர் திரு சாமி. இளங்கோவன் தீட்டிய காணிக்கைப் பாடல் உள்பட மலரில் பதிவான படைப்போவியங்கள் அத்தனையும் எங்கள் சிந்தனைக்கு நல்விருந்து படைத்தன! "கவிதைகள் கட்டுரைகள்" எல்லாமே தேனில் தோய்த்தெடுத்த பலாச்சுளையென; இனித்தன. சான்றாண்மை மிக்க அறிஞர்கள் எல்லார் மனத்திலும் இடம்பிடித்துத் திகழும் "தமிழ்மாமணி" தங்களின் பொங்குபுகழ் மேன்மேலும் தழைத்தோங்கி; இன்பத் தமிழ்போலே... என்றும் நிலைத்து வாழும். என்பதனால் பாட்டாளிப் பாவலன் இடிமுரசார் வாழ்த்தும் வண்ணம், அனைவரும் படித்து, தங்களின் மேன்மைமிகும் தூயதமிழ்ப் பணியைச் சீராய்த் தெரிந்துகொள்ளும் பாங்கினில்...

படிப்பகம்

www.padippakam.com



அன்பின்மிகு பாசமிகு எனது இதயமிகு அய்யா தமிழ்மாமணி இறைவிழியனார் அவர்களுக்குத் தங்கள் பச்சையப்பனார் நனி வணக்கம். நலம்; நலமே சூழ்க. எனது இடக்கண் நரம்பு அறுவை சிகிச்சை செய்தும் பலனில்லை; நரம்பு கூடவில்லை. பக்கவாதத்தால் ஏற்பட்ட இழப்பு தமிழ்க்கு இடக் கண்ணைப் பரிசாகக் கொடுத்தேன் எனக் கருதுகிறேன். 6 ஆண்டுக்காலம் இதே வேதனை. அடுத்து, தங்கள் தமிழ்ச்சேவையைப் பாராட்டிப் புதுவை அரசு தமிழ்மாமணி விருதினைப் புதுவை முதல்வர் அளித்த செய்தியில் முத்தமிழாம் முக்கனியின் இனிப்பைக்கண்டேன். தங்கள் அயராத்தொண்டுக்குத் தமிழுலகம் மேலும் பலவிருதுகள் அளித்துப் பாராட்டவேண்டும். தங்கள் தமிழ்த்தொண்டு நற்றமிழாக மணம் பெறுகிறது.

- அரிமா. திருவள்ளூர்ப் பச்சையப்பனார், திருவள்ளுவர் மாவட்டம்.

---

தாங்கள் புதுச்சேரி அரசின் மிக உயரிய விருதான 'தமிழ்மாமணி' விருதைப் பெற்றதறிந்து மிக்க மகிழ்ச்சி. - செ. பாலசுந்தரம், சென்னை.

---

# பாவை. நடவரசனாரின் மடல்

பேரா. இரா. மதிவாணன் அவர்களின் தொல்காப்பியர் பிறந்தநாள் கணிப்பு, வரவேற்கக் கூடிய கருத்தாகும். "கி.மு 865 மேழத்திங்கள் முழுமதி நாளன்று தொல்காப்பியர் பிறந்தார் என்பதை ஏற்று அந்நாளில் அரசு விடுமுறையும் தொல்காப்பியர்க்கு விழாவும் ஏற்பாடு செய்தால் நல்லது. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் உட்காரும் கட்சியிடம் இக்கருத்தைக் கொண்டு சென்று நடைமுறைப் படுத்திட வேண்டும்.

திருவள்ளுவர்க்கு எப்படிக் கோட்டமும் கன்னியாகுமரியில் சிலையும் அமைத்திருகின்றோமோ, அப்படித் தொல்காப்பியர்க்கும் செய்திட வேண்டும்.

புலவர் வி.பொ. பழனிவேலனார் அவர்கள் 1985ஆம் ஆண்டு குறளியம் அலுவலகம் வந்திருந்து "வேலா பிறமொழி - தமிழ் அகரமுதலி" என்னும் நூடிலினை வெளியீடுசெய்தார். அது தனித்தமிழ் அன்பார் களுக்கும் ஆர்வலர்களுக்கும் நல்லதோர் வழிகாட்டியாக இன்றும் இருந்து வருகின்றது. அதற்கு நேரிசையாசிரியப் பாவில் நூன்முகம் 73 வரிகளில் எழுதியுள்ளார். அதன் ஈற்றில் 4 வரிகளைப் பாருங்கள். அது அவர்தம் இலட்சியமாய் விளங்குகிறது.

"வண்டமிழ் ஒண்டமிழ் தண்டமிழ் யாண்டும் தூய்மையாய்ப் பரவத் தொண்டு செய்கவென வேண்டுகோள் விடுத்து அமைகிறோம் தனித்தமிழ் வெல்க வென்று சாற்றியே". இத்தகை இனியவரைத் தனித்தமிழ்த் தொண்டரைச் சிறப்பித்த நற்றிமிழுக்கு என்றும் நன்றி

- தோழமையுடன். பாவை நடவரசன், ஈரோடு.

www.padippakam.com



# கூவாய் கருங்குயிலே

### ஆசிரிய விருத்தம்



எங்கள் திருநாட்டில் எங்கள்நல் ஆட்சியே
பொங்கிடுக வாய்மை பொலிந்திடுக என்றேநீ
செங்கதிர் சீர்க்கையால் பொன்னள்ளிப் பூசிய
கங்குல் நிகர்த்த கருங்குயிலே கூவாயே.

கன்னடம்தெ லுங்குமலை யாளம் களிதுளுவம்
முன்னடைந்தும் மூவாது மூள்பகைக்கும் சோராது
மன்னும் தமிழ்தான்இவ் வையத்தை யாள்களனக்
கன்னற் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே.

வராதெனச் சொன்னாரும் வருந்தத்தன் ஆட்சி
இராத இடமில்லை என்றநிலை நாட்டத்
திராவிட நாடு சிறைநீங்க என்று
குரலே முரசாகக் கூவாய் கருக்குயிலே.

உண்ணல் உடுத்தல் உயிர்த்தல்எனச் செந்தமிழை
நண்ணலும் ஆம்என்று நாட்டுக; வேறுமொழி
எண்ணல் நிறுவல் இலாதுகல்வி கட்டாயம்
பண்ணல் பயன்என்று கூவாய் கருங்குயிலே.

செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில், வையம் நடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே.

இளைஞர் துடிக்கின்றார் தமிழின்நிலை எண்ணிக்
கிளைஞர் அடைகின்ற கேடுபொறார் இங்கு
விளையாட வேண்டாமே ஆளவந்தார்! வாழ்வின்
களைநீக் குகஎன்று கூவாய் கருங்குயிலே

பாலோடு நேர்தமிழும் பைந்தமிழ் மக்களும்
ஆலோடு வேர்என் றறிந்திருந்தும் ஆளவந்தார்
மேலோடு பேசி விடுவரேல் அவ்வாட்சி
சாலோடு நீர்என்று சாற்றாய் கருங்குயிலே.

- பாவேந்தர் பாரதிதாசனார்

www.padippakam.com



# கொடுத்தபடி தொடுத்த பாடல்கள்

## வஞ்சி விருத்தம்-13

மா+மா+ புளிமாங்காய்

வில்ல டித்தே இசைபாடு!
சொல்லெ டுத்துச் சுவைகூட்டு!
வல்ல நெறியை வகுத்துக்கொள்!
இல்ல றத்தில் இசைநாட்டு!
1. - வில்லவன் ப. முத்தமிழ்வாணன், புதுச்சேரி.

தேடு தமிழால் சிறப்பொன்றை!
நாடு மதியால் உயர்வெல்லாம்!
கூடு தேர்ந்த குமுதன்னில்!
பாடு படுவாய்! பயன்காண்பாய்!
2. - புதுவை. ப. அங்கயற்கண்ணி, புதுச்சேரி.

கோடாக் கொள்கைப் பிடிப்பாக
வாடா முயற்சி உழைப்பூக்கம்
ஆடா மனமும் அறங்கொண்டு
தேடாச் செல்வம் தருமிங்கே!
3. - ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.

நல்லார் நாளும் பொலிவாரே
பொல்லார் என்றும் நலிவாரே
வல்லார் வாழ்வு வளமாகும்
எல்லா நலமும் பெறுவாரே.
4. - ச. திருநாவுக்கரசு, முசிறி.

எண்ணில் மொழிகள் இருந்தாலும்
மண்ணில் சிலவே மனிதர்கள்
எண்ணும் படியே இயற்றல்போல்
கண்ணே! தமிழே! கனிவாயே!
5. - பாவலர் திருவை அரசு, சாமிமலை.

ஏனோ? தமிழன் அவன்வீரம்
தானே இழந்து துடிக்கின்றான்
தேனாய் இனிக்கும் தமிழ்மானம்
போனால் திரும்ப வருமாமோ?
6. - அதலை இராமன், மதுரை.

மரபில் பாடல் எழுதென்றால்
அரிய தமிழின் புகழ்கூறல்
சரிதான் எனினும் அதைமட்டும்
கருத்தில் கொள்ளல் முறைதானா?
7. - பாச்சுடர் வளவ. துரையன், கடலூர்.

மழைப்பால் பருகிப் பயிர்வாழும்
உழைப்பால் உலகின் வளமோங்கும்
உழைப்பின் பெருமை உளத்தெண்ணி
உழைப்போம்; உயர்வோம்; நலம்காண்போம்!
8. - வெ. பரமசிவபாண்டியன், சின்னாளபட்டி.

தாழ்வாம் கருத்தைப் பரப்பாதே
வாழ்வாம் ஒழுங்கை வழுவாதே
காழ்ப்பை விதைத்தே ஒறுக்காதே
வாழ்வாய்! பிறரை வதைக்காதே!
9. - பாவலர் தேவமைந்தன், புதுவை.

பேய்பூ தங்க(ள்) இவைபற்றிக்
காய்வு(ம்) உவப்பு(ம்) இலராகித்
தோய்ந்து தூக்கம் தொலைத்திட்டே
ஆய்வீர்! முடிவில் முனைவர்நீர்!
10. - புலவர். வில்லியன்

யானே முதல்வன் எனக்கூறி
ஏனோ திரியும் எளியோனைக்
கூனாய்க் குருடாய்க் குறிப்பார்கள்
மானே அவனை மதிக்காதே!
11.- புலவர் கோ. தனபாலன், வில்லியனூர்.

வீட்டில் சமைத்த உணவுண்ணான்
ஓட்டை எடுத்தே அலைவானேன்?
ஊட்டச் சொற்கள் மிகவாக
ஓட்டைப் பிறசொல் தமிழ்க்கேனோ?
12.- வே. இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

அல்லும் பகலும் அரன் நாமம்
சொல்லிப் பரவித் துதிப்பார்க்கே
இல்லை பிறவி, இடர்கள்தான்
செல்வம் பெருகிச் சிறப்பாரே.
13. - வி. சங்கர், பருத்திப்புத்தூர்.

அன்பில் தழைக்கும் உலகென்றே
இன்பத் தமிழில் குறளுண்டு;
வன்மை உலகம் இனிவேண்டாம்
அன்பை வளர்ப்பீர் உலகீரே!
14.- பாவலர் சொல்லியன், திருவண்ணாமலை.

வள்ளல் தந்த அருட்பார்வை
உள்ளம் கொள்ள உணர்ந்திட்டால்
கள்ளம் முற்றும் அழியுந்தான்
உள்ளும் புறமும் செழிக்குந்தான்
15. - புலவர் அ. பக்கிரிசாமி,திருநள்ளாறு.

படிக்கும் வயதில் படிக்காமல்
பிடிப்பே இன்றி இருந்தால்பின்
இடியாய் அமையும் எதிர்காலம்
கடிதாய் உணர்ந்து செயலைச்செய்.
16. - வை. சிவா,திண்டிவனம்.

www.padippakam.com



தனியார் தங்கள் விருப்பம்போல்
தனியே வருவாய் பெறுவார்கள்
இனியார் என்றும் தடுக்காமல்
தனியார் கொள்ளை தடைசெய்வோம்.
17.- பாவலர் ஆ. கோவிந்தராசலு, புதுச்சேரி.

காலை யில்பூத் திடும்பூவே
மாலை யில்வா டுவதேனோ?
பாலை வனமாய்ச் சுடாமல்உன்
சோலைத் தென்றல் இணைந்திட்டேன்.
18. - அ. சோலைத்தென்றல், தென்நெற்குணம்.

தேனே பழமே எனவாயால்
வீணே உளறல் கயமைகாண்
ஊனே உயிரே எனவாழ்ந்தால்
வானே வழுத்தும் நயமைதான்
19. - மணிமொழியார், பொள்ளாச்சி.

அன்பே உன்னைப் பிரிந்தாலே
அன்றே நானும் இறப்பேனே
அன்பால் பூத்த மலர்கள்நாம்
என்றும் வாழ்வில் இணைவோமே
20. - மு. சண்முகம்,பாதூர்.

கண்ணில் உள்ள இமையானாள்
என்னைக் காக்கும் மருந்தானாள்
என்னில் இவளே அழகானாள்
அன்னை உன்னை மறவேனே!
21. - மு. அருணகிரி, பாதூர்.

விண்ணும் மண்ணும் வலம்வந்தும்
இன்பம் இல்லை எதிலும்தான்
என்னின் அன்பை உனதுள்ளே
குன்றாய் வைத்தேன் அதனாலோ!
22. - த. சத்தியப்பிரியா, அங்கராயநல்லூர்.

தமிழே எங்கும் ஒலிக்கட்டும்
தமிழின் புகழும் பெருகட்டும்
தமிழால் அழகும் மிளிரட்டும்
தமிழால் புதுமை நிலவட்டும்.
23. - க. நாகப்பன், திருகாளிகாபுரம்.

நானே உணர்வேன் கலையாவேன்
கோனே எவன்தான் கடையாவான்
தேனே உணர்த்த மலர்வானேல்
கூனன் அதிலும் குதராதான்
24. - புலவர் இடிமுரசார், சென்னை.

முன்னை யோரின் புகழ்தன்னைப்
பின்னை யோர்நாம் பெறவேண்டும்!
உன்னை நானும் அழைக்கின்றேன்
என்சொல் லைநீ மதிப்பாயே !
25. - வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

ஊரில் உலகில் புகழ்கொண்டோர்
ஆரும் அடக்கம் அணிந்தாரேல்,
பேரும் புகழும் நிறைவாகும்
போரும் வழக்கும் இரிந்தோடும்.
26. - நா. தண்டபாணி, அம்பல்.

தேனைப் போலத் தமிழ்பேசு
வானைப் போல உயர்ந்தேறு
யானை போலப் பயன்காட்டு
மானைப் போல உயிர்வாழ்வாய்.
27. - சூலூர் கலைப்பித்தன், கோவை.

தென்றல் வீசுந் தெருதன்னில்
குன்றே யனைய செயலெண்ணி
நன்றே புரிந்து நலமாகச்
சென்றே இனிது வதிவோமே.
28.- புலவர் த. தட்சணாமூர்த்தி, தி .ரா. பட்டினம்.

சட்டப் படிப்புப் படித்தாலும்
கிட்ட வருமோ பணங்காசு
கட்டுக் கட்டாய்ப் பணமுட்டை
கொட்டும் அரசின் கொடிக்கீழே.
29. - மு. இராம. கனகராசன், புதுச்சேரி.

கொடுத்து மகிழும் குணமெங்கே?
இடுக்கண் களையும் உறவெங்கே?
அடுக்குத் தொடரில் தமிழெங்கே?
கெடுத்த தமிழா பதிலெங்கே?
30. - அண்ணா. தருமலிங்கம், புதுச்சேரி.

உனக்குள் இருக்கும் உணர்வெல்லாம்
மனத்தில் வைத்தே மகிழ்வோடே
இனத்தைக் காப்பாய் இனிதாக!
சினத்தைத் தவிர்த்தல் சிறப்பாகும்!
31. - க. தண்முகநம்பி, தரகம்பட்டி.

உழைக்க நீயும் விரைகண்ணா
பிழைக்க வழியும் வரும்கண்ணா
அழைக்கும் புகழால் உயர்கண்ணா
தழைத்து நாட்டில் சிறகண்ணா.
32. - தி தீபா, வி. புதுப்பாக்கம்.

வல்ல தமிழில் படிநண்பா
நல்ல நூலை வடிநண்பா
சொல்ல எளிய தமிழ்நண்பா
வெல்லு தமிழ்பால் புகுநண்பா!
33. - உ. பிரபாகரன், வந்தவாசி.

வல்லோர் வகுத்த நெறியோடே
நல்லோர் கூறும் மொழிகேட்பின்
எல்லா நலமும் பெறுவாயே
அல்லல் நீங்கி வளர்வாயே!
34. - பா. பாலாமணி, விருத்தாசலம்.

www.padippakam.com



நிலத்தில் இறையை வகுத்தோரேன்
நிலவ ணிந்த இறையோனைச்
சொலவே இல்லை, அறியேன்யான்
சொலவி லைவோர் வருவாரோ.
35. - இல. வேமன்னராசு, வானூர்வட்டம்.

தமிழ்தான் நமக்கே உயிர்நாடி
அமிழ்தே தரினும் விரும்பேன்நான்
தமிழை நினையா(து) இருக்கும்நான்
தமித்தே கிடப்பேன் சுடுகாட்டில்.
36. - தி. பக்கிரிசாமி, திருமலைராயன்பட்டினம்.

இல்லா தவர்க்குக் கொடுக்காதார்
கல்லா தவர்க்கும் உதவாதார்
நல்லோ ரிடத்தே பழகாதார்
எல்லா மிருந்தும் பயனில்லார்.
37. - தி. மனோகர், நெய்வேலிநகரம்.

குறைக ளகற்ற விழையாதார்
நெறிக ளிழந்தே தவிப்பாரே
மறைக ளோதும் செயல்பாட்டை
நிறைவாய் ஏற்றால் மகிழ்வாரே!
38. - நா. பொன்னுசாமி, புதுவை.

இந்தத் தேர்தல் தமிழ்த்தாயைச்
சொந்தத் தாயாய்க் கருதாதா?
வந்த தீங்கும் விலகாதா?
எந்தா யாட்சி யியங்காதா?
39. - வானவன், வெங்காலூர்.

சங்கத் தமிழின் செறிவாலே
தங்கத் தமிழ்த்தாய் மகிழ்ந்தாளே!
பொங்கும் தமிழின் உயர்வாலே
சிங்கத் தமிழன் சிறப்புற்றான்!
40. - கல்லைக் கபிலன், கள்ளக்குறிச்சி.

அழகுத் தமிழை அமுதென்பேன்!
பழகும் மொழியில் எளிதென்பேன்!
நிழலாய்த் தமிழைத் தொடாந்தாலோ
வழங்கும் புகழைத் தமிழென்றும்!
41. - க. கனேசன், கள்ளக்குறிச்சி.

தங்கக் கதிரோன் ஒளியாலே
பொங்கும் கடலின் அலையெல்லாம்
தங்கச் சுருளாய் ஒளிவீசும்!
எங்கள் மனமோ களிப்பாகும்!
42. - கவிஞர். அ. கனகசபாபதி, தென்கீரனூர்.

வாழும் நாட்டில் வளமில்லை!
சூழும் தொல்லைக் களவில்லை!
பாழும் வயிறு பசியாறக்
கூழும் இல்லை உயிர்வாழ!
43. - காரை. இளங்கம்பன், புதுச்சேரி.

வேலைப் பிடிப்பான் வினைசெய்வான்!
நூலைப் படிப்பான் நினைப்பானே!
பாலைக் குடிப்பான் பசியாறிக்
காலைப் பிடிப்பான் களிப்பானே!
44.- புலவர். கோ. இளங்கோ பாண்டியன், புதுச்சேரி.

ஒருவர் அறிந்தால் கமுக்காகும்
இருவர் அறிந்தால் தமுக்காகும்
தருவாய் அருளைத் தடையின்றிக்
குருவே சரணம் அடைந்தேனே!
45. - அரச ஈசுவரி இளங்கோ, பாரதி நகர்.

செல்வம் மிகநீ விருந்துண்வாழ்!
ஒல்லும் வகையால் அறங்கள்செய்!
மெல்ல உணர்,நீள் உலகைப்பார்!
அல்லும் பகலும், குறள்நூல்கல்!
46. - கு. கோவிந்தான், செங்கம்.

கல்வி என்னும் உயர்செல்வம்
அல்லல் இல்லா அருஞ்செல்வம்
வெல்லம் போன்றே இனிக்கின்ற
கல்விச் செல்வம் அழியாதாம்!
47. - கு. இளவரசி, விருத்தாசலம்.

சேர்ந்த கட்சி அணிசேர்ப்பார்
தேர்ந்தும் ஆள அமர்வாரே
தீர்வோ கூட்டாம் உறவாலே
நேரும் சுயாட்சி நிலைமாற்று
48. - சசி, கடலூர்.

கோடி மாந்தர் விழிப்புற்றார்!
தாடி யழகன் தகைகொண்டான்
ஓடித் தமிழர்க் குழைப்பொன்றே
தேடல்! அறியான் - அறியானே!
49. - இராம. சித்தார்த்தன், திருவைகாவூர்.

வாழ்க்கை என்ற கடல்தன்னில்
சூழ்ச்சி என்ற அலைமோதும்
ஆழ்ந்த அன்பைப் பகிர்ந்திட்டால்
தாழ்வின் றிவாழ்வோம் எதிர்நின்று!
50. - அ. செயபால், சி.பா.சு.த.கல்லூரி.

தானே வாழ நினைப்பானேல்
ஈனன் ஆவான். உலகத்தார்
பேண வாழும் மனிதன்தான்
காணும் தேவன் என்பார்கள்
51. - க. தனலெட்சுமி, திருபட்டினம்.

நேர்மை வேண்டும் உலகின்கண்
சீர்மை வேண்டும் செயலெல்லாம்
தேர்வு வேண்டும் உறவொன்றில்
சார்பு வேண்டும் பெரியோர்கண்
52.- கவிஞர் பாலசந்திரன் சேகபு, வேலூர்.

www.padippakam.com



தமிழே தமிழே எனப்பேசி
தமக்கே நலத்தை வளர்ப்பார்கள்
தமிழை மறந்த தருக்கர்தாம்
உமியை நிகர்த்த உலுத்தர்கள் !
53. - க.அ. ஒளி, கொடுமுடி.

விண்ணைக் கற்க மறந்தாலும்
மணணை வளர்க்க மறப்பேனோ
கண்ணின் ஒளியை இழந்தாலும்
மண்ணின் தமிழை மறப்பேனோ
54. - இ.ந.கு. அராங்கசாமி, தங்கவயல்.

பறவைக் காய்ச்ச லெனும்நோயால்
பறவை மட்டும் மடியாமல்
இறந்த மனிதர் பலருண்டு
மறந்தும் அதனூன் இனிவேண்டாம் !
55. - கவிஞர் மருத்துவர். பெ. போத்தி, மதுரை.

வரிசை யுணரா வலிமைக்கோ
விரித்த புகழும் வெறுமைக்கோ
புரிந்த புரட்டும் புதுமைக்கோ
தெரித்த தனைத்தும் திறமைக்கோ
56. - புலவர் த. ஆறுமுகன், சென்னை.

என்னுள் அவள்தான் இருக்கின்றாள்
இன்பம் அள்ளித் தருகின்றாள்
அன்பால் என்னை இழுக்கின்றாள்
பொன்போல் நித்தம் சிரிக்கின்றாள்!
57. - வி. சனார்த்தனன், காஞ்சிபுரம்.

நாக்கி னுக்கு நரம்பேது!
போக்கி ரிக்கு வரம்பேது!
வாக்கி டுவோம்,நம் துயரத்தைப்
போக்கி டுவார்கண் டறிந்தேநாம்
58. - சாந்தன், காஞ்சி.

கூட்டம் கூடி முழங்கிட்டார்!
ஏட்டில் எழுதிக் குவித்தாரே!
நாட்டில் தமிழர் அரசாண்டார்!
ஆட்சி மொழியை மறந்தாரே!
59.- மு. தமிழ்நிலவன், ஐயன்குடிப்பாளையம்.

முயற்சி உழைப்பும் இணைந்தாலே
அயர்த லின்றி உயர்வாரே!
கயமை பொய்மை இணைந்தாலே
உய்த லின்றி அழிவாரே!
60. - இரா. அருணாசலம், புதுச்சேரி.

ஆட்சிப் பிடிப்பில் அவலங்கள்!
சூட்சிச் சதியில் துயரங்கள்!
மாட்சித் தகர்ப்பில் மதிப்புக்கள்!
காட்சி தருதே நடப்புக்கள்!
61. - தெ. முருகசாமி, புதுச்சேரி.

கல்வி நம்மின் உயிராயின்
செல்வம் நம்மின் உடலாகும்
கல்வி செல்வம் இணைந்திட்டால்
நல்லோன் என்றே புகழுண்டாம்!
62. - கு. சுசிலா குப்புசாமி, சுசிலா.ஆ.ப.நி.

வாஞ்சிப் பாவின் இலக்கோடு
நெஞ்சம் எண்ணும் உருவாக்கம்
கொஞ்சம் கூட்டிப் பகுத்திட்டேன்
வஞ்சம் இல்லா வகையாலே!
63. - மு. மலர், கள்ளக்குறிச்சி.

சின்ன சேலச் செழிப்பிற்குக்
கன்னல் போன்ற மனிதர்கள்
இன்னல் போக்கும் கருத்தோடே
என்றும் வாழ்தல் அறிவாயே!
64. - பி. குப்புசாமி, சுசிலா.ஆ.ப.நி.

அன்பின் வேரே இணைப்பாகும்
இன்பம் கொண்டே இணைதற்குத்
துன்பம் செய்வோர் பலராவர்
அன்பே நாமும் பிரிவோயோ!
65. - தி. மணிமேகலை, விழுப்புரம்.

எங்கும் தமிழே ஒலிக்கட்டும்!
பொங்கும் இன்பம் பெருகட்டும்!
மங்கை யருமே சிறக்கட்டும்!
எங்கள் குலமும் தழைக்கட்டும்!
66. - அர. இளம்பூரணன், விழுப்புரம்.

கற்றல் சிறந்த செயலாகும்
கற்றோர் எங்கும் சிறப்புற்றே
நிற்றல் காண்பீர்! உலகத்தில்
கற்றே நாமும் களிப்போமே!
67. - கு. செல்வக்குமரன்.

தங்கத் தமிழன் அமர்ந்திட்டால்
சங்கத் தமிழும் செழித்திட்டால்
எங்கும் தமிழாய்த் தழைத்திட்டால்
பொங்கும் இன்பம் பெறலாமே!
68. - த. சந்திரசேகரன், புதுக்கோட்டை.

தாயிற் சிறந்தார் எவராமோ?
சேயின் இன்பம் பெரிதாகும்
கோயில் தெய்வம் மகிழ்வூட்டும்
வாயில் நின்றே வரவேற்பாள்!
96. - தி. உசாதிருநாவுக்கரசு, விழுப்புரம்.

பல்லின் பெருமை அறிவீரே !
சொல்லின் வளமே சிறப்பாகும்
பல்லைப் பேணிக் கருத்தாகச்
சொல்லைக் காப்பீர் உயிரென்றே !
70. - செ. இராசலட்சுமி, கள்ளக்குறிச்சி.

www.padippakam.com



நன்றி என்றால் எதுவென்பார்
பன்றிக் கன்றைப் பசுவென்பார்
நன்றும் தீதும் தெரியாதோ
இன்றிப் பாரில் இதுசீரோ?
71. - அரிமா. இளங்கண்ணன், சென்னை.

“கற்றார் உரைத்தார் உணர்ந்தாரா?
மற்றோர்க் காகப் படித்தாரே
சற்றும் வாழ்வில் கொளவில்லை
எற்றுக் கன்னார் வெறுங்கல்வி?”
72. - சு. இலம்போதரன், சென்னை.

தானம் என்றும் கொடுத்தாலே
ஊனம் இன்றி உலகில்நீ
ஞானம் பெற்றுச் சிறப்பாயே
வான மும்உன் வசம்தானே!
73. -சு. முகிலரசன், திருக்கோவிலூர்.

கோடி கோடி குவித்தற்கே
தேடி உன்னை அடைவாரைக்
கூடி விரட்டி அடித்தாலே
கோடி நன்மை அறிவாயே!
74. - எழிலன், சென்னை.

குற்றம் புரிந்த உணர்வோடு
சுற்றித் திரிந்த நிலைமாறி;
கற்றுத் தெளிந்த குறளாலே
பெற்ற நலனோ பெரிதாகும்!
75.- புவலர். மா.சு. மணி, திருக்கழுக்குன்றம்.

அன்பின் அருமை அறிந்திட்டால்
பண்பின் உயர்வைப் புரிந்திட்டால்
நண்பின் நலனை நுகர்ந்திட்டால்
என்றும் மகிழ்வோ டிருப்போமே !
76.- ந. நித்தியானந்தம், திருக்கழுக்குன்றம்.

உண்மை உறுதி உயர்வானால்
நன்மை நடத்தை நலமானால்
பெண்மை பெருமை பெறுமானால்
வன்மை குறையும் வழியாகும்.
77. - என். கோபி, மாமல்லபுரம்.

அன்பின் வடிவாய் இருந்திட்டால்
பண்பின் பயனைப் பெறுவோமே !
எண்ணம் நன்றாய் இருந்திட்டால்
மண்ணில் வளமாய்த் திகழ்வோமே !
78. - சி.ம. சிவஞானம், விருத்தாசலம்.

குறளை நாளும் படிப்போர்க்கே
அறிவும் பண்பும் வளர்ந்தோங்கும் !
அறனைக் கொண்டு வதிவோர்க்குத்
திறனும் திருவும் சிறந்தோங்கும் !
79. - பாவலர் வே. முத்தையன், முத்தியால்பேட்டை.

உள்ளம் பெரிதாய் உடையோர்க்கே
கள்ளம் சிறிதும் கலவாதாம்!
வெள்ளம் விரைவாய் நிறைந்தோடப்
பள்ளம் காணும் விளையாட்டாம்!
80.- வே. பூங்குழலி பொருமாள், திரு.வி.க. நகர்.

பொழிநீர் புனலில் நடந்தால்தான்
செழிப்பாய்ப் பயிர்கள் நடம்போடும்!
மழைநீர் தடுத்தே அணையிட்டால்
பிழைக்கும் உயிர்கள் தடுமாறும்!
81. - சா. சம்பத்து, பெருமாங்குப்பம் .

பஞ்சம் கலந்து அழைத்தாலும்
நஞ்சைத் துணிவாய் அருந்தாதே!
நெஞ்சைத் திருத்தி வளர்வாயே
நெஞ்சம் கசிந்து உரைக்கின்றேன்!
82.- அப்பர் சி. சுந்தானம், சி.பா.சு.த.கல்லூரி.

பத்தாம் வகுப்பு வரையிங்கே
மொத்தம் நான்கு முறைக்கல்வி!
முத்தாய்க் கல்வி முறையொன்றாய்
வைத்தால் தீரும் பலசிக்கல்!
83.- தா. அன்புவாணன் வெற்றிச்செல்வி, காஞ்சிபுரம்.

உண்மை பேசி உயர்வோமே!
வெண்மைக் கொடியைப் பிடிப்போமே
கண்ணி யத்தால் சிறப்போமே!
பண்பாட் டையும் மறவோமே!
84. - க. பாலமுருகன், விழுப்புரம்.

காட்டில் வாழும் விலங்காக
நாட்டில் சிலரும் திரிகின்றார்
வீட்டார் எவரும் விரும்பாமல்
நாட்டில் அலைய விடலாமோ?
85. - பா. சத்தியா, வடலூர்.

அண்ணா கூற்றை வழியொற்றிக்
கண்ணாய் தாயாம் தமிழ்த்தாயை
எண்ணி வாழ்ந்தாய் உயர்ந்திட்டாய்!
மண்ணின் புகழைப் பெறுகின்றாய்
86. - த. தெய்வானை, சுசிலா ஆ.ப.நி.

அன்னைத் தமிழைப் பயில்வோமே
கன்னல் சுவையை உணர்வோமே
இன்னல் இல்லா இனிமையை
அன்னை தவிர எவர்வார்?
87. - அர. கிரிசாநாதன், விழுப்புரம் மாவட்டம்.

இன்பம் துன்பம் உளவாழ்வே
கன்னல் போன்ற நலவாழ்வாம்!
இன்னல் இல்லா உளங்கொண்டோர்
மின்னல் என்றே ஒளிர்வாரே!
88.- செ. பொன்னம்மாள், செஞ்சிக்கோட்டை.

படிப்பகம்

www.padippakam.com



ஆற்றின் ஊற்றாய் இருந்தாலும்
போற்றிக் காத்தல் நலமாகும்
போற்றி வாழ்ந்தால் உயர்வுண்டாம்
போற்றா மனிதர் உயர்வாரோ?

89. - இரா. அரங்கராதன், சுசீலா ஆ.ப.நி.

தங்கம் என்ன உணவாமோ?
அங்கம் எல்லாம் அணிந்தாலும்
உங்கள் வேட்கை தணியாதோ!
மங்கை குணமே இதுதானோ?

90. - த. பாண்டியன்,சுசீலா ஆ.ப.நி.

இன்பம் என்ற நலத்தோடு
துன்பம் இல்லா வளமையை
என்று நாமும் பெறுவோமோ?
அன்றே உள்ளம் மகிழ்வாகும்!

91. - அர. அருண்குமார், விழுப்புரம் மாவட்டம்.

அன்பின் வடிவே இறையென்பர்
நன்மை புரிவோர் இறையாவர்
இன்மை புரிவார் இழிவுற்றல்
அன்றும் இன்றும் நிகழ்தற்காண்!

92. - த. மகாலட்சுமி, சுசீலா ஆ.ப.நி.

பெண்ணே நீயும் படித்திட்டால்
கண்ணாய் நாட்டோர் உனைக்கொள்வர்
கண்ணாய் இருத்தல் நலமன்றோ?
புண்ணாய் வாழ்தல் எதற்காமோ?

93. - தி. தமிழ்க்கொடி, விழுப்பிரம்.

நன்றி கெட்ட உலகத்தில்
நன்மை நாளும் உரைத்தாலும்
துன்பம் என்றே இகழ்ந்திட்டால்
இன்பம் எவ்வா றடைவாரோ?

94.- மு. ஆனந்தன், திரு. கொ.அ.க.கல்லூரி.

கண்ணே மணியே கனிச்சாறே!
விண்ணின் மீனே! விழியேரே!
பெண்ணே மகளே பெரும்பேறே!
எண்ணம் செயலால் எழுவாயே!

95. - நெடுந்தகை நேயன், விழுப்புரம்.

நன்றி மறத்தல் நலமல்ல
என்றார் பொய்யில் புலவோரும்.
கன்றின் துயரை அகற்றற்குத்
தன்னின் மைந்தன் தலைதந்தான்.

96. - ஆ. இராசு, இரிசிவந்தியம்.

தேனாய் நெஞ்சில் இனித்தாளே!
வானாய் என்னில் நிறைந்தாளே!
மானாய் நினைவில் குதித்தாளே!
மீனாய் அமைந்த விழிகொண்டே!

97. - து. விவேகானந்தன், புதுவை.

ஆண்டு முதலில் தடையெல்லாம்
தாண்டி வந்தேன் தமிழ்கற்க!
யாண்டும் புலவர் தமிழ்நூல்கள்
வேண்டும் அளவில் மகிழ்ந்தேனே!

98. - மோ. சரண்யா, மயிலம்.

தன்னைப் பெரிதென் றெனல்கண்டான்
அன்பைப் பொழியா அருளில்லான்.
வன்மம் கொண்ட மனத்தோரை
என்றும் நீங்கி உலவப்பா!

99. - வி.டி. இராமகிருட்டினன், சென்னை.

"சீரார் கர்த்தர் நமக்குள்ளே
நேர்மை உண்மை உரைப்போமே
பாரோர் பார்க்க நடப்போமே
சீர்மை பெருக்கித் திகழ்வோமே."

100. - மு. சத்தியா, சி.பா.சு.த.கல்லூரி.

நானே செய்வேன் பணியேதான்!
மாணச் செய்தேன் அருள்வேண்டி!
தானே கண்டேன் களிப்புற்றேன்
தேனாய்ச் சுவையும் உண்ர்ந்தேனே!

101. - ஆ. இந்திரா, சி.பா.சு.த.கல்லூரி.

காதல் என்னும் செடியைநீ
வேதம் போலே வளர்த்தேதான்
பேதம் இன்றிச் சுவைத்தாலே
சாதல் காணாச் சிறப்பேற்பாய்!

102. - இர. சுசீலா, திருக்கோவிலூர்.

பொன்னும் மணியும் கலந்தாற்போல்
என்கண் கலந்து நிறைந்தாளை
என்ன வாறே அழைத்தாலும்
எண்ண அளவில் இனிப்பாளே!

103. - க. அரசு, பெங்களூர்.

எட்டாய் உருவம் உடையாரின்
மொட்டு மகனின் கலைதன்னைத்
தட்டுத் தடையில் படிப்பிற்கே
கட்டுப் பாட்டில் நுழைந்தேன்நான்!

104. - ந. மோகனா, சி.பா.சு.த.கல்லூரி.

இருண்ட மனத்தை அகற்றிட்டே
திரண்ட உதவி புரிந்தாலோ
அருளைப் பேணிப் பெறும்வாழ்த்தை
உரமாய் உனக்குத் தருவானே!

105. - து. அன்பு, விழுப்புரம்.

வானம் பார்த்த நிலம்போலே
மானம் உள்ளார் நடத்தையால்
ஆன மட்டும் ஒழுக்கத்தை
ஊன மாக்க நினையாரே!

106. - கோ. இராசலட்சுமி, கள்ளக்குறிச்சி.

www.padippakam.com



இனிமை வாய்ந்த தமிழைப்போல்
தனியாய்ச் சிறந்த மொழியேதும்
இனிமேல் தோன்ற இயலாதே
இனிமை பெற்றுத் திகழாதே!
107.- மா. முத்துத்தங்கமணி, விருத்தாசலம்.

அருளை அன்பை அமுதான
பொருளைப் போற்றும் உயர்வென்று
கருதும் அனைத்தும் தருவாரைப்
பரரைக் கண்டே பரவேனோ
108. - சீ. பெ. முத்துக்குமரன், கோவை.

ஈழத் தமிழர் பகைவெல்ல
வேழத் தமிழர் தமிழ்நாட்டில்
தாழா உணர்வாய் உடன்செல்லின்
வாழும் உலகம் நமைப்போற்றும்!
109. - மூ. குழ. மூர்த்தி, மூலிமங்கலம்.

பெண்ணின் பெருமை உணராதான்
மண்ணின் மணத்தை நுகராதான்
பண்பின் பயனை அறியாதான்
பண்டைத் தமிழர் இனமல்லான்
110. - தமிழ்நெஞ்சன், புதுச்சேரி.

பாட்டில் கடவுள் வழிபாட்டில்
ஏட்டில் உரையில் தமிழோடு
வேற்று மொழியைக் கலப்போரை
ஓட்டு தமிழர் அகம்விட்டே!
111. - திருவாணன், திண்டுக்கல்.

நேர்மை நீதி நிலைவீழ
கூர்மை அறிவால் கொலைசெய்யும்
தீர்வை எடுப்போர் திறம்மாற்றி
ஆர்வ அன்பால் அணிசெய்வோம்.
112.- புலவர் பழனி. அரங்கசாமி, ஆலங்குடி.

வீட்டில் வெளியில் தமிழ்பேசு!
தீட்டும் ஏட்டில் தனியாக்கு!
நாட்டில் ஆட்சி மொழியாக்கு
காட்டும் ஆர்வம் மறவாமல்!
113. - ப. குருதேவன், தேவதானப்பட்டி.

பள்ளம் மேடு வயல்தன்னில்
துள்ளி ஓடும் பசுமாடு!
வெள்ளம் ஓடும் நதிதன்னில்
கள்ளன் சென்றான் இரவோடு!
114. - க. கவின் அரசன், புதுச்சேரி.

காட்டை வளமாய்ப் பெருகச்செய்!
வீட்டில் மரங்கள் வளர்க்கச்செய்!
மேட்டில் குப்பை அழிக்கச்செய்!
நாட்டில் செல்வம் கொழிக்கச்செய்!
115.- வி. கோபால் கிருட்டிணன், தி.கொ.அ.க.கல்லூரி.

வருத்தம் கொண்ட மனத்தின்கண்
நெருடல் போக்கி நலமீயும்
கருத்தாம் ஒன்றை தெரிவித்தே
அருளும் உள்ளம் தரவேண்டும்.
116. - தி. உருபன், திருநாவலூர்.

திங்கள் முகமோ அமிர்தய்யா
எங்கள் நினைவில் குடிக்கொண்டீர்
உங்கள் அன்பால் வளர்ந்தோமே
சங்கத் தமிழும் வணங்காதோ!
117. - கே.கு. வீரவேல், தி.கொ.அ.க.கல்லூரி.

இன்பம் வாழ்வில் உனைச்சூழ
என்றும் அன்பைத் துணையாக்கு!
நன்றே நவின்று செயலாக்கி
வென்றே அறத்தை நிலைநாட்டு!
118. - புலவர்.ந. ஞானசேகரன், திருலோக்கி.

கன்னல் தமிழே தவிக்காதே
இன்னல் கண்டு கலங்காதே
அன்னை போலத் துணையாக
அன்பன் வருவான் உறவாக
119. - க.ச மூர்த்தி, தி.கொ.அ.க.கல்லூரி.

விண்ணில் உதிக்கும் கதிர்போல
மண்ணில் தழைத்தல் எளிதாமே!
திண்ண உளத்திற் கரிதானால்
பெண்ணே அதுவே இழிவாமே!
120.- செ. புனிதா எலிசபெத்து, தி.கொ.அ.க.கல்லூரி.

சேயும் தமிழே மொழியாதோ
காயும் இயல்பாய்க் கனியாதோ
மேயும் நுனிப்புல் மனிதர்கள்
ஓயா துரைத்தும் உணராரோ.
121. - மு.வே. கங்நாதரன், சென்னை.

வாக்கில் உறுதி பொழிவார்கள்
வாக்கைப் பெற்றே மறைவார்கள்
வாக்கை யளிக்கும் முனம்நன்றாய்த்
தூக்கி யாய்ந்தே இடுவீரே!
122.- பாவலர் கருமலைத்தமிழாழன், ஓசூர்.

"பற்றுக் குரிய நிலத்திற்குச்
சற்றும் வேண்டாக் கழிவெல்லாம்
முற்றும் தவிர்க்க முயன்றிட்டால்
சுற்றுச் சூழல் குலையாதே!"
123.- பாவலர் கு. தட்சணாமூர்த்தி, புதுச்சேரி.

முருகன் சொன்ன ஒருவார்த்தை
பெருகித் தமிழும் உயர்ந்தோங்க!
அருந்திப் பார்த்த ஒருநாளில்
அருமைத் தமிழே எனச்சொல்வேன்!
124. - சி. பிரகாசு. எட்டப்பாளையம்.

www.padippakam.com



மரபைப் போற்றும் புலவர்நல்
மரபுச் செய்யுள் புனைந்திட்டால்
மரபாய்த் திங்கள் இதழ்தன்னில்
மரபுக் கவியை வளர்க்கின்றார்.
125. - சா. சாகிதா, தி.கொ.அ.க.கல்லூரி.

தென்றல் காற்றும் நெருப்பாகி
என்றன் யாக்கை தனைத்தீண்டும்
என்றன் தாயாம் தமிழ்தன்னை
எண்ணிப் பார்க்க மறப்பேனேல்.
126. - ச.ந. இளங்குமரன், நாகலாபுரம்.

பாட்டில் உணர்வைப் பயிலென்றே
காட்டும் புரட்சிக் கவிவாழ்வாய்
நீட்டும் நினைவில் நெறிநின்றே
பூட்டுந் தளையும் பொடிப்போம்வா!
127. - மணிமேகலைகுப்புசாமி, புதுச்சேரி.

கூரை தனிலே வசிக்கின்ற
ஏரைப் பிடிக்கும் உழவன்தான்
ஊரைத் துறந்து வெளியேறி
வேரை இழந்து தவிக்கின்றான்
128. - மனோந்திரா, மதுரை.

ஆலைக் கரும்பே எனதன்பே
பாலை வழிநீ நடந்தாலும்
நூலை ஊசி இழுத்தாற்போல்
காலைத் தொடர்ந்தே வருவேன்நான்
129. - பாரதிகண்ணம்மா, மதுரை.

வஞ்சி விருந்த வகையொன்றே
நெஞ்சி னிறுத்திப் புனைகின்றீர்!
எஞ்சி யிருக்கும் வகைப்பாக்க
துஞ்சி விடினே நலமாகமோ?
130. - இலம்பூர்க்கிழான், கள்ளக்குறிச்சி.

நல்ல கவிதை நலங்கண்டு
மல்லாக் கவிதை யவங்கண்டும்
நல்ல கவிதை வரவேற்கி
னல்லாக் கவிதை யழிந்தேகும்.
131.- புலவர் பெ. சயராமன், கள்ளக்குறிச்சி.

ஆடி வேண்டும் விதையூன்ற
ஆடி வேண்டும் புனைவிற்கு
ஆடி வேண்டும் அழகூட்ட
ஆடி வேண்டும் கலைக்காக
132. - திருக்குறள் நெறியன், கள்ளக்குறிச்சி.

தமிழே நம்மின் இருகண்கள்
தமிழே நம்மின் உயிர்மூச்சு!
தமிழே வாழ்வை வளமாக்கும்
தமிழால் உயர்வோம் உயர்விப்போம்!
133. - படைக்களப் பாவலர், ஆர்க்காடு.

பாடும் நேரம் தமிழ்பாட்டு!
கூடும் நேரம் தமிழ்ப்பேச்சு!
ஈடு தமிழ்க்கே மொழியில்லை!
நாடு தமிழின் நலம்நாடு!
134. - ஆ. சோதி மலர், விளாப்பாக்கம்.

தேர்வுக் காலம் எனவேதான்
சூழ்ந்து படித்து வருகின்றோம்
தேர்வில் வெற்றி விளைவாகும்
யார்க்கும் மகிழ்வே மிகவாகும்
135. - ஆ. முகிலரசி, ஆர்க்காடு.

துன்பம் இல்லாச் சமுதாயம்
மண்ணில் நிலையாய் நிறுத்தற்கே
எண்ணம் நம்மில் செழிப்பாக
என்றும் இருக்க முனைவோமே!
136. - கு. நதியா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

அன்பும் அறனும் சிறந்தோங்க
இன்ப நிலையே இனிதோங்கக்
கன்னித் தமிழை வளர்ப்போமே
கண்போல் என்றும் புரப்போமே!
137. - தேன்மொழி, ஆர்க்காடு.

அலையாய் என்றும் இதயத்தில்
வலமாய் வந்தாய் நினைவெல்லாம்
உலகின் பாவம் அழித்திட்டு
நிலையாய் அமைதி தருவாய்நீ
138. - கு. சுரேசு, திண்டிவனம்.

ஆதி சிவனை நினைவாய்நீ
சோதி அருளைப் பெறுவாய்நீ
வீதி மதங்கள் அழிப்பாய்நீ
சாதி வெறியைக் களைவாய்நீ
139.- செ. சுபத்ரா, சி.பா.சு.தமிழ்க்கல்லூரி.

கவர்ச்சி கண்டு கலங்காதே!
புவியில் யாவும் நிலையல்ல!
தவம்செய் துபெற்ற வரம்வாழ்வு!
கவனம் கொள்நீ திருநாட்டில்!
140. - சு. இளவேனிலரசன், திருக்கோவிலூர்.

கல்லில் கண்ட சிலையைப்போல்
சொல்லில் வைத்தேன் உனையேதான்
எல்லை இல்லா அகத்தின்பால்
கொல்லு கின்றாய் எனையே நீ!
141. - சு. தென்றலரசன், திருக்கோவிலூர்.

வீட்டைத் துறந்த மனிதர்கள்
நாட்டை விட்டே அலைந்தாலும்
காட்டைச் சுற்றித் திரிந்தாலும்
கோட்டை பிடித்தும் பயனில்லை
142. - செனோவா, விழுப்புரம்.

www.padippakam.com



எண்ணும் எண்ணம் தெளிவாகத்
திண்ணம் தமிழே துணையாகும்!
கண்ணைக் காக்கும் கருத்தேபோல்
பண்ணார் தமிழ்நீர் பயில்வீரே!
143. - கி. சிவகுமார், விருத்தசலம்.

வாழும் தமிழை வளர்ப்போமே!
தாழும் நிலையை அடைந்திட்டால்
வேழச் சீற்றம் அடைந்திங்கு
வீழ்த்தி வெற்றி பெறுவோமே!
144. - ப. மூர்த்தி, பெங்காலூர்.

வாழ்வில் உயர்வைப் பெறுதற்கே
ஊழல் பொய்மை உலகெங்கும்
சூழ்ந்து கெடுதல் விளைவிக்கும்
பாழோர் அழிதல் பயன்தானே!
145. - புலவர் செ. இராமலிங்கன், புதுச்சேரி.

தூண்டா ஒளியாய்த் திகழ்ந்தோங்க
யாண்டும் இளமைச் செழிப்போங்க
மாண்பார் தமிழை முடிவேந்தர்
தூண்போல் வளர்த்தார் புகழ்மேவ!
146.- இரா. அருமருந்தலைவன், திருமருகல்.

கோடி தருவேன் எனக்கூற
ஒடிக் காலில் விழுந்தார்கள்
நாடி இல்லா உடலின்மேல்
கோடி போர்த்தி அடிவைத்தார்
147. - புலவர் அய்யா. மோகன், கள்ளக்குறிச்சி.

ஆடி முடிய மழைக்காலம்
ஆடி முடிய மணக்காலம்
ஆடி முடிய புணர்க்காலம்
ஆடி முடிய எதிர்கலாம்
148. - அ. தமிழினியன், நமச்சிவாயபுரம்.

மானாம் பெண்ணை மதிக்காமல்
மானம் கெடுக்கும் மதிக்கேடர்
கூனல் ஆட்சி புரிகின்றார்
ஈனப் பிறவி இனிவேண்டா
149. - அ. தமிழடுக்கம், நமச்சிவாயபுரம்.

கட்டை கடத்தும் தொழிலில்லார்
பட்டை காய்ச்சும் தொழிலில்லார்
அட்டை போன்ற பிழைப்பில்லார்
சட்டச் சபைக்குத் தகும்பேர்கள்.
150. - மோ. கலாபன், சின்னசேலம்.

மேடைப் பலதில் முழங்கிட்டான்
பீடை அரசை விழச்செய்து
பாடை கிடத்திப் புதைப்பானாய்
பாடை படுத்தான் புதைந்தானே.
151. - மோ. கலாநிதி, தேவபாண்டலம்.

காய்கள், கனிகள், நறுந்தேன்,நீர்,
வாய்க்கும் பயறு, பசுங்கீரை
ஆய்ந்தே இயல்பாய் அருந்திட்டால்
நோயும் நொடியும் நுமைச்சாரா!
152. - மு. குறளகன், கருவூர்.

தாய்,தன் தகப்பன், தனதில்லான்
சேய்கன் மனத்தைச் சிதைத்தேநல்
வாய்மை பெருமை வளந்தன்னை
மாய்க்கும் மதுவை யொழிப்போமே!
153.- பு. சித்தராபுகழேந்தி, கிருட்டினராயபுரம்.

தேர்தல் துறையின் நெறிதன்னால்
ஊரின் சுவர்கள் ஒளிகுன்றல்
ஆர்தல் இன்றி விளங்கல்காண்
தேர்தல் துறைக்கும் புகழ்மன்னும்.
154.- புலவர் அரங்க. சேசாசலம், புதுச்சேரி.

பாட்டன் பாட்டி மகிழ்ந்தாலும்
பாட்டுப் பாடிச் சிறந்தாலும்
வீட்டுத் துணையால் உயர்ந்தாலும்
நாட்டு நலனை மறவேனோ?
155.- கவிஞர் தே. சனார்த்தனன், முதலியார்பேட்டை.

கற்ற கல்வி கலையாவும்
மற்ற வர்க்கும் தருவோமே!
பெற்ற பிள்ளை பெருமைக்கு
வெற்றித் தமிழை மொழிவோமே!
156. - கவிஞர் கி. பாரதிதாசன், பிரான்சு.

கொண்ட கொள்கை தனில் மூச்சாய்
மண்ணை ஆள்வார் திகழ்வாரேல்
விண்ணை முட்டும் பெருமாற்றல்
கண்டே திகழும் வளர்நாடாய்!
157.- இரா. தமிழ்அழகன், திருக்கழுக்குன்றம்.

காலத் தோடு பயிரிட்டால்
ஞால மெல்லாம் உயிர்வாழும்
கோல முப்பால் வழிபோனால்
காலன் நம்கண் வரமட்டான்
158. - வீ. வில்வநாதன், வெங்காலூர்.

கண்கள் உன்னைத் தினம்கண்டு
கொண்டேன் இன்பம் எனக்குள்ளே!
எண்ணம் முழுதும் உனைச்சுற்றி
வண்பாய்த் திரியும் அலைபோலே!
159. - மணிமேகலை, திருக்கோவிலூர்.

உண்ண உணவும் உனக்கேதாம்
எண்ணம் பலவாய் சிதைந்திங்கே
சண்டை நிலவும் சமயத்தில்
மண்டை உருளும் வழிதானே
160. - ம. கேசவன், வெள்ளம்பாக்கம்.

www.padippakam.com



சித்த மருந்தின் சிறப்பாலே
நித்தம் என்னை அணுகிட்டார்
பித்தம் தெளிந்தே திரும்பிட்டார்
தத்தம் நோயை விரட்டிட்டார்
161. - கி. பாண்டுரங்கன், இரிசிவந்தியம்.

எண்ணும் எழுத்தும் உணர்வோமே!
கண்ணும் கருத்தாய் வசிப்போமே!
விண்ணும் மண்ணும் இணைதற்போல்!
பெண்ணும் ஆணும் உழைப்போமே!
162. - கொ. எட்டையனார், சுசீலா ஆ.ப.நி.

கற்றார் பெறுவர் பெருமையே!
கற்போர் மகிழ்வர் மதியாலே!
கற்போம் நாமும் இனிமையாய்!
கற்றல் என்றும் நலமாமே!
163. - மு. உசாராணி, கள்ளக்குறிச்சி.

ஆன்றோர் போற்றும் குறளாலே!
சான்றோர் போற்றும் தமிழாலே!
சான்றோர் எனவே திகழ்வாயே!
தேன்போல் மருந்தாய்ச் சிறப்பாயே!
164. - சோ. அ. சுந்தரி, புதுச்சேரி.

நல்ல நல்ல கருத்தாலும்
கல்வி வல்ல செயலாலும்
சொல்லச் சொல்ல அமிழ்தாகும்
வெல்லத் தமிழை வளர்ப்போமே!
165. - சோ. இளஞ்செழியன், புதுச்சேரி.

அன்பு கொண்டு பழகுங்கால்
துன்பம் நம்மைப் பிரிந்தோடும்
இன்பம் நமக்குத் தெளிவாகும்
என்றும் இதனை நினைவில்கொள்!
166. - சோ. கனிமொழி, புதுச்சேரி.

எண்ணும் எழுத்தும் தமிழாகக்
கண்ணாய்க் கொள்வாய் தமிழ்பற்றை!
விண்ணை முட்டும் புகழ்சேரும்
மண்ணும் வாழ்த்தும் உணர்வாயே!
167. - ஆ. சோ. அறிவரசன், புதுச்சேரி.

சிறப்பின் பிறப்பாம் மனிதர்கள்
மறப்பின் இதனை அறியாமல்
பிறப்பின் உயர்வை உணராதார்
இறப்பின் முடிவை அடைகின்றார்
168. - பா. தனலட்சுமி, புதுச்சேரி.

தமிழன் எனும்நல் உணர்வோடே
அமிழ்தென் தமிழே உயிரென்பான்
உமியே பகையென் றொழித்தென்றும்
நிமிர்தன் மானம் பெறுவானே!
169. - கருவூர்ப் பாரி, தான்தோன்றிமலை.

ஏனோ பலர்தான் துணையாகார்
வீணர் விரித்த வலையால்தான்
மானம் அழியும் உறவேதான்
கோனான் எதையும் அறியாதான்!
170.- கவிஞர் பெ. அறிவழகன், சின்னசேலம்.

திருமால் அயனின் மயல்நீக்க
அருகில் நெருங்க இயலாத
நெருப்பு மலையாய் உருக்கொண்டோன்
விரும்பும் மொழிநம் தமிழ்தானே
171.- சு. அருண்பிரசாத், தி.கொ.அ.க.கல்லூரி.

கேப்பைக் கூழுக் கலைகின்றார்;
கோப்பை கிடைத்தால் மகிழ்கின்றார்;
மூப்பை விரட்டி'அடிப்பார்போல்
வேர்ப்ப விரைந்து நடக்கின்றார்
172. - வே.ச. திருமாவளவன், புதுச்சேரி.

நாடும் மொழியும் மறந்தாயேல்
பீடு பெருமை உனக்கேது?
கேடு விளைக்கும் பகைவென்றே
நீடு புகழில் நிலைப்பாயே!
173. - அறவாழி, திருவேட்டகுடி.

அய்ந்தாண் டரசில் அலங்கோலம்
செய்தாண் டவர்கள் உயர்வாரோ?
பொய்த்தாண் டவங்கள் புரிவோரை
மெய்தான் நிறுத்தும் நெறியாலே!
174.- கவி. சக்கர. கண்ணபிரான், சென்னை.

மாற்றி மாற்றி அரசாண்டோர்
தேற்றிக் கொழுத்த தெருப்பேச்சை
போற்றிச் சிலபேர் புகழ்ந்தாலும்
தூற்றும் மக்கள் தொகைகோடி
175. - இரா. சுதந்திரப்புலவன், சென்னை.

பண்டு முதலாய் எமைகாத்துத்
தொண்டு நெறியை அளித்தாயே!
வண்டு மொய்க்கும் கயல்கண்ணே
கண்டு தேற்றி அருள்வாயே!
176. - இரா. அபிராமி, திண்டிவனம்.

தேர்தல் நெருங்கித் தெருட்டும்நாள்!
ஆர்நல் அறவோர்? மறவோர்யார்?
தேர்ந்து, மறவோர் சிதைந்தோடச்
சீர்த்த அணியைத் தெரிவோமே!
177. - ச. தேன்மொழி சண்முகம், ஒசூர்.

அன்று கல்வி விடுத்தாயே
என்றும் உள்ளம் வருந்தல்பார்!
நன்றாய்க் கல்வி பெறுவாரே
என்றும் உள்ளம் மகிழ்வாரே!
178. - அ. அண்ணாதுரை, கடலூர்.

www.padippakam.com



மதமாய் விலகி எரியாதே!
இதமாய்க் குலவி மகிழ்வாய்நீ!
இதயம் கனிந்தே உறவாகி!
உதயக் கதிராய் உயர்வோம்வா!.
179. - மு. குழந்தை, கரூர்.

நன்மை ஒன்றைப் புரிவாயே
என்றும் காக்கப் பழகிக்கொள்
நன்மை செய்ய உரைப்பாயே!
இன்பம் அதானல் பெறுவாயே!
180.- வி.ஆர். காயத்திரியன், புதுக்கோட்டை.

பொல்லா விழியால் நிலம்நோக்கி
நில்லும் அணங்கே எனைப்பார்த்துச்
சொல்லும் கவிதை அறியேன்யான்
நல்ல வாய்ச்சொல் அறிவேன்யான்
181. - கவிஞர். சதி, தோக்கவாடி.

ஊக்க முடைய மனம்என்றும்
தாக்கம் இருப்பின் தயங்காது
ஆக்கம் கொண்டே உழைத்தாலே
தேக்கம் இன்றி உயர்வோம்நாம்.
182. - கு. அம்மச்சி, திண்டிவனம்.

பூவின் மணந்தான் பரவல்போல்
நாவின் உரையும் நலம்சேர்க்க
மேவும் அன்பை விரித்திட்டால்
தாவி உயிர்கள் உனைச்சேரும்!
183. - த. குமாரசாமிஎசுதர், கருவூர்.

பாட்டின் வேந்தர் படைத்திட்ட
ஏட்டை நாளும் எடுத்தோது!
காட்டு காட்டு தமிழ்நெஞ்சை!
மீட்டு வருக தமிழ்நாட்டை!
184. - புலவர் சி. வெற்றிவேந்தன், பாகூர்.

"அமிழ்தின் இனிய தமிழ்க்கோவே!
இமிழ்நன் னாடும் புகழ்பேசும்!
உமிழா துளத்தே அழைத்தேற்பாய்!
கமழ்வேன் இந்நிலந் தனிலென்றும்!"
185. - க. அன்புக்கோகிலா, செஞ்சி.

வரம்கேட் போரின் வலிமிக்க
கரங்கள் குவியும்! தமிழாண்டின்
வரவை எதிர்பார்ப் பவர்வாழ்வில்
தரவேண் டாநீ பூகம்பம்!
186. - இரா. பிரவினா, தி.கொ.அ.க.கல்லூரி.

அன்று குங்கு மமேவாங்கி
இன்று குப்பை யிலேஉள்ளேன்
இன்று குங்கு மமேவாங்கிக்
குன்றா நன்கொ டையில்உள்ளார்.
187. - சா. கண்ணன், புதுச்சேரி.

நம்மின் தமிழை அழிக்காதே!
தம்மின் பெருமை ஒழிக்காதே!
எம்மின் புகழைப் பழிக்காதே!
இம்மண் ணுலகில் அழியாதே!
188. - கு.அ. தமிழ்மொழி, புதுச்சேரி.

கடவுள் நோக்கி வழிபட்டுப்
பிடிக்க முயல்வர் மடையர்செஞ்
சடையன் பெரியன் அவன்நம்மைப்
பிடித்துக் கொள்ள முயல்வீரே!
189. - வெ. வித்யா, புதுச்சேரி.

தன்னை வென்றான் தரையாள்வான்
நன்மை செய்வான்; நவிந்தோர்க்குப்
புன்மை புரிவார் தமைதாக்கும்
திண்மை பெறுவான் திருவாவான்.
190. - பொன். பசுபதி, புதுச்சேரி.

உண்மை உழைப்பி லுயர்வாமே
திண்மை வெற்றிக் கெளிதாமே
வெண்மை உள்ளத் தெளிவாமே
தொன்மை தமிழின் வளமாமே!
191.- பாவலர் இரத்தின. சின்னசாமி, புதுச்சேரி.

வானம் வழங்கும் மழைநீரும்
வீணா காமல் நிலத்துள்ளே
போனால் நிலத்தின் அடிநீரும்
தானாய் உயரும்; அதைச்செய்வோம்
192. - கூத்தரசன், புதுச்சேரி.

ஒண்மைத் தமிழே ஒளிகூட்டும்!
பெண்மை காட்டும் பெருந்தன்மை!
வண்மை சேர்ந்த வளஞ்சேர்ப்போம்!
உண்மை என்றும் உயர்வூட்டும்!
193.- புலவர் திருக்குறள் நாவை சிவம், மணற்பாறை.

பெற்ற அருந்தா யினும்மேலாய்
உற்ற தமிழ்த்தாய் துயர்நீக்கிக்
குற்றம் கலப்புப் புகுத்தாமல்
கற்றற் கியைந்த வழிவாழ்வோம்!
194. - பொறிஞர் அகன், மாத்தூர்.

ஊக்கம் மிகவும் இருந்திட்டால்
ஆக்கம் படைக்க முயல்வோமே!
தேக்கம் தனையே ஒழித்திட்டால்
நோக்கம் அடைதல் எளிதாகும்.
195. - த. அருள்சோதி, புதுச்சேரி.

பாடி நகைப்பான் தனியாவான்!
தேடித் திரிவான் பசிநோக்கான்!
கூடி இருந்தால் உரையாடான்!
தேடும் காதல் உணர்வாளன்!
196. - இரா. இராசராசன், கரூர் மாவட்டம்.

படிப்பகம்

www.padippakam.com



சுமையாம் நூல்கள் குழந்தைக்கு!
சுமையாய் மனிதன் நிலத்துக்கு!
அமர்ந்த நிலையில் இருந்திங்கே!
சுமையால் நிரப்பல் முறைதானோ!
197. - இரா. நளினா, புதுச்சேரி.

அழகின் உருவாய்த் திகழ்கின்றாய்!
பழகு தமிழாய்ச் சிறக்கின்றாய்!
குழகே யார்நீ எனக்கேட்க
அழகன் முருகன் எனச்சொன்னாய்!
198. - ச. சீதாலட்சுமி, புதுச்சேரி.

அருமைப் புளிமா தெரியாமல்
வருமா பாவும் வரியாக?
தருமா பாடல் சுவையாக?
திருமால் கேட்கும் வினாவைப்பார்.
199. - ப. திருமால், காஞ்சிபுரம்.

மானே தேனே மலர்க்கண்ணே
வானே முகிலே ஒளிர்முத்தே
ஈனேன் என்ற பெயர்போய்நான்
ஆனேன் உன்னால் நறுந்தாயாய்!
200. - த. கருணைச்சாமி, தேனி.

எண்ணித் துணிந்தால் எளிதாகும்
வண்ணக் கவியும் உருவாகும்
கண்ணின் ஒளியும் கனிவாகும்
மண்ணின் புகழும் பெரிதாகும்.
201. கே. வெற்றிச்செல்வி, சென்னை.

அலையால் வருமே பெருவெள்ளம்
கலையால் வருமே இறையுள்ளம்
சிலையால் வருமே சிறப்பெல்லாம்
விலையால் வருமே இவையெல்லாம்?
202. - பா. தனலட்சுமி, புதுச்சேரி.

நீயும் நானும் பிறரல்லோம்
தேயும் பிறையாய்த் திகழ்ந்தில்லோம்
தாயும் சேயும் எனநாமே
ஆயுள் வரையில் இருப்போமே!
203. - மொ. தண்டபாணி, விழுப்புரம்.

உன்னை என்றும் மறவாமல்
கண்ணைப் போல உறவாடி
நின்னை நம்பிச் செயல்பட்டால்
மண்ணைப் போன்று மகிழ்வோமே!
204. - க. இளமதி, கடலூர் மாவட்டம்.

"என்னை ஈன்ற! தவத்தாயே
வன்மை இல்லா உயிராம்நீ!
கண்ணின் மணியே உனைஎன்றும்
என்நெஞ் சம்ம றவாதுண்மை"
205. - நா. முருகன், சிதம்பரம்.

அன்று வந்த வருக்கெல்லாம்
தன்நெஞ் சினிக்க உதவப்பின்
வன்நெஞ் சுத்தில் அருள்சேர்த்தே
இன்சொல் வழங்கும் உயர்ந்தோனே.
206. - ப. கவிதா, சிதம்பரம்.

"சீர்மை மிகும்என் தமிழ்த்தாயே!
ஊர்போற் றும்நற் சிறப்புற்றாய்!
தார்வேந் தர்கள் வளர்த்தார்கள்!
கார்மு கிலாய்நீ இருக்கின்றாய்!"
207. - பா. சியாமளாகௌரி, சிதம்பரம்.

"இந்தி யத்தாய்! உனக்கென்றும்
வந்த னம்நான் செலுத்துங்கால்
இந்த இளநல் லரிமாக்கள்
முந்தை நிலைக்கே உனைத்தள்வார்."
208. - நா. சுகந்தா, சிதம்பரம்.

என்தாய்த் தமிழே அகிலத்தில்
நன்கு போற்றி உனைக்காப்பேன்
உன்சீர் மைக்கண் எனதுள்ளம்
பொன்போற் பொலிய மகிழ்வேனே!
209. - சி. செந்தில் பாமா, சிதம்பரம்.

தமிழர் எதிரி எவராயின்
தமிழர் ஒன்றாய்ப் பொருதிட்டால்
தமிழர் வேட்கும் உரிமைக்குத்
திமிராய் எதையும் செயமாட்டார்.
210.- இசைவாணர். எ. சிவாநந்தம், பாகூர்.

அடிமைத் தமிழர் தமிழ்நாட்டில்
அடிமை வேட்பு விழைகின்றார்
மடியும் தமிழர் உரிமைக்கே
முடிவில் வழக்கு முறையிட்டார்.
211. - சிவ. கலைவாழி, பாகூர்.

## பாடல் படைத்திடுக

### வஞ்சி விருத்தம் - 14

மாணா உடற்குள் மலர்மணம்போல்
காணா திருக்கும் உயிர்உறையும்
வாணாள் வரைக்கும் வளர்புகழைத்
தூணாய் நிறுத்தித் துளங்குகவே.

1. ஒவ்வோரடியிலும் மூன்று சீர்கள் இருக்க வேண்டும்.
2. ஓரடியின் சீரமைப்பு முறையே : மா+மா+கருவிளங்காய்
3. இவ்வாறான நான்கடிகள் ஒரெதுகை பெற்றிருக்க வேண்டும்.

இவ்வாறமைந்த பாடல் ஒன்றை விரும்பிய பொருளில் இயற்றி, வரும் 30-04-2006 க்குள் விடுக்க.

- புலவர் அரங்க. நடராசன்

www.padippakam.com





## மணமக்கள் வாழ்க!



❖ தி.ஆ.உ0ௗ௩எ தை உசூ ஆம் நாள் (08-02-2006) புதுவை அரியாங்குப்பம் திருமிகு. கிருட்டினன் - இலட்சுமி இணையரின் மகனும் என் மாணாக்கனுமாகிய செல்வன் கி. வேலழகன் புதுவைப் பூரணாங்குப்பம் திரு. கிருட்டினமூர்த்தி - மஞ்சுளா இணையரின் மகள் செல்வி ஏமலதா ஆகிய இருவருக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

❖ தி.ஆ.உ0ௗ௩எ தை உசூ ஆம் நாள் (08-02-2006) புதுச்சேரித் தேங்காய்த்திட்டு, திரு பொன். பூபாலன் - ஆனந்தி இணையரின் மகன் செல்வன் பூ. ஆனந்தபாலன் புதுவை, அரியாங்குப்பம் திரு பூ. சத்தியமூர்த்தி - கன்னியம்மாள் இணையரின் மகள் செல்வி ச. வினோதினி ஆகிய இருவருக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

❖ தமிழ்த்தொண்டர் மணி வெள்ளையனாரின் இல்லத் திருமணம். தி.ஆ. உ0ௗ௩எ சுறவம் கசூ ஆம் நாள் ( 29-01-2006 ) மலேசியாவில் திருமிகு புட்பவதி - மணி வெள்ளையனார் இணையரின் மகன் செல்வன் இளஞ்சித்திரன் மலேசியா திருமிகு ச. அம்மாசி - கு. செல்லம்மா இணையரின் மகள் செல்வி தமிழ்ச்செல்வி ஆகிய இருவருக்கும் தமிழ்ச் சான்றோர்கள் முன்னிலையில் தமிழ்த்திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மணமக்கள் எல்லா நலனும் வளனும் பெற்றுவாழ நற்றமிழ் வாழ்த்துகிறது.

- ஆசிரியர்.

## பறிப்பும் திணிப்பும்

ஏழையெளியோர் அதிகம் பயன்படுத்தும் அஞ்சலட்டையிலுள்ள குறைந்த இடத்தில் கால்பக்கத்தைப் பறித்து இந்தியும் ஆங்கிலமும் திணிக்கப்பட்டுள்ளன (புதிதாகவந்துள்ள அஞ்சலட்டையில்) தமிழர்கள் பயன்படுத்தும் அஞ்சலட்டையில் தமிழுக்கிடமில்லை! ஏன் இந்தக் கொடுமை? மீண்டும் இந்தியெதிர்ப்புப் போர்தொடங்க வேண்டுமா? வடக்கேயுள்ள நாற்பது தமிழர்களும் பன்னிரு அமைச்சர்களும் இக்கொடுமையை நீக்கமுயல வேண்டும் இன்றேல் மொழிப்போர் மூளும்!

www.padippakam.com



# நூல்-அறிமுகம்

"மணிமொழிப் பாட்டியல்", "இந்திய விழுதுகள் இருபத்தைந்து", "பாடுதம்பி பாடு"; மூன்று நூல்களின் ஆசிரியர் : முனைவர் தமிழப்பன், மெய்.மு; வெளியீடு : உலகத் தமிழ் நூலக அறக்கட்டளை, எச் - 138/2, 15ஆவது குறுக்குத் தெரு; பெசந்து நகர், சென்னை - 600 090; விலை: முதலிரண்டு நூல்கள் ஒவ்வொன்றும் உரு. 25/- மூன்றாம் நூல் உரு. 40/-

"மணிமொழிப் பாட்டியல்" இந்நூல் ஒருயாப்பிலக்கண நூலாகும். பாட்டு எழுதுவோர் கவனத்தில் கொள்ள உறுப்பியல் செய்யுளியல், ஒழிபியல் ஆகியவற்றுடன் தற்சிறப்புப் பாயிரத்தையும் சேர்த்து இருநூற்று இருபது நூற்பாக்களை மிக அருமையாக எளிமையாக, இனிமையாக உணர்த்தும் வண்ணம் படைத்துள்ளார் நூலாசிரியர் முனைவர் தமிழப்பன், மெய்.மு.

அகவற்பா, வெண்பா, கலிப்பா, மருட்பா. ஆகிய பாக்கள் பற்றியும், அவற்றின் வகைகளைப் பற்றியும் நன்றாக விளக்கி எடுத்துக்காட்டுடன் அளித்திருக்கிறார் நூலாசிரியர். பாக்களை இலக்கணத்துடன் எழுதுவதற்கு இந்நூல் நன்கு உதவும்.

"இந்திய விழுதுகள் இருபத்தைந்து" இந்திய நாட்டைக் காக்கும் விழுதுகளாக இருபத்தைந்து மாநிலங்களும் வேற்றுமையில் ஒற்றுமையாக விளங்கின்றன எனும் அடிப்படையில் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு", "கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" போன்ற பல கதைகள் மூலம் ஒற்றுமை உணர்வை இளைஞர்களுக்கு உணர்த்துகிறார். நூலாசிரியர் முனைவர் தமிழப்பன், மெய்.மு.

இந்நூலில் பாரதியார், பாவேந்தர், கவிமணி தேசிகவிநாயகம் ஆகியோர் எழுதிய பாடல்களை ஆங்காங்கே காட்டி, கல்வி, ஒழுக்கம், பண்பு, வாழ்க்கை முறை ஆகியவற்றை விளக்கி இருக்கும் பாங்கு நூலாசிரியரின் அறிவாற்றலை நன்கு புலப்படுத்துகிறது. இன்றைய இளைஞர்களுக்கு நல்ல விருந்தாகும் இந்நூல்.

"பாடுதம்பி பாடு" இந்நூல் சிறுவர்க்குரிய பாட்டு நூல். இதில் "தமிழ்த்தாய் வாழ்த்து" தொடங்கி "தமிழா" முடிய நூறு சிறுவர் பாடல்கள் உள்ளன. பாடல்கள் அனைத்தும் எளிய சொற்களால் அரிய கருத்தினைக் அறிந்துகொள்ளும் வகையில் சிறப்பாக உள்ளன.

தமிழ்மொழியின் சிறப்பை ஆங்காங்கே உணர்த்தித் திருக்குறள் பெருமையையும் பாடலில் புனைந்திருக்கிறார் நூலாசிரியர் முனைவர் தமிழப்பன் மெய்.மு. இந்நூலைச் சிறுவர்களுக்குப் பரிசாக வழங்கலாம்.

"இலக்கிய மணிகள்" ஆசிரியர் : புலவர் அரங்க. நடராசன்; வெளியீடு : அகத்தியர் அச்சகம், 17, முதல் தெரு, இராசய்யர்தோட்டம், புதுச்சேரி - 605 013; விலை : உரு. 60/-

www.padippakam.com



"இலக்கிய மணிகள்" என்னும் இந்நூலில் "கண்ணகியின் கற்பு வெளிப்பாடுகள்" தொடங்கிக் "குயில் பாட்டும் ஆந்தைப்பாட்டும்" ஈறாகப் பன்னிரண்டு அருமையான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

முதல் கட்டுரையில் கற்பின் பெருமையை விளக்கிக் கண்ணகியே கற்பின் வெளிப்பாட்டிற்குச் சிறப்பாக விளங்குகிறாள் என்பதற்குப் பல சான்றுகள் கூறி கற்புக் கடம் பூண்ட இத்தெய்வமல்லால் பொற்புடைத்தெய்வம் யாம் கண்டிலமால் எனும் கவுந்தியடிகளின் கூற்றால் நன்குணரும் படிச் சிறப்பாக எடுத்துக்காட்டியிருக்கிறார் நூலாசிரியர் புலவர் அரங்க. நடராசனார்.

கோவலனைப் பிரிந்து தனித்துத் துயருற்றிருக்கும் கண்ணகியிடம் "சோமகுண்டம் சூரியகுண்டம் மூழ்கி நீராடிக் காமனைத் தொழுதால் பிரிந்த கோவலனைக் கூடி மகிழலாம்" என்றழைத்த தோழியிடம் "பீடு அன்று" என மறுத்த பெண்ணிற் பெருந்தகையாள் கற்பெனும் திண்மையைப் பெற்ற கண்ணகியின் முழுமையான வரலாற்றுச் செய்தியை இக்கட்டுரையில் நன்கு அமைத்திருக்கிறார் நூலாசிரிர்.

இந்நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் தேனுடன் தினை மாவைக் கலந்துண்பது போன்ற இனிய சுவையை உள்ளத்துணர்த்தி எண்ணி எண்ணி மகிழத்தக்கதாக உள்ளது.

இலக்கிய இலக்கணத்தில் ஆழ்ந்த புலமையும் ஆய்வும் பெற்றவர் இந்நூலாசிரியர் புலவர் அரங்க. நடராசனார் என்பதற்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாகும். - புலவர் செ. இராமலிங்கன்.

சிதறல்கள் ஆசிரியர்: செவ்வியன் (தமிழநம்பி) வெளியீடு : முதன்மொழி பதிப்பகம், 590 வாரியார் தெரு, எசு. பி. எசு.நகர், கன்னியாக்குளம் சாலை, விழுப்புரம் - 605602; பக்கம் : 56. விலை : 20/-

'சிதறல்கள்' ஆசிரியர் செவ்வியனார் நற்றமிழ்த்தொண்டர். மொழிஞாயிறு பாவாணரோடும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரோடும் நெருக்கமான பழக்க முடையவர். உணர்வெல்லாம் தமிழ் வளர்ச்சி எனச்செயல்படுபவர். மரபுபாடல்கள் படைப்பதில் வல்ல பாவலர் என்றாலும் துளிப்பா வகையில் 'சிதறல்கள்' நூலைப் படைத்துள்ளளார். பாடல்தோறும் அவர்தம் பட்டறிவும் நுண்ணிய காட்சி நோக்கும் குமுகாயத்தைத்திருத்தும் நகைச்சுவைக் கருத்தும் தமிழ்ப்பகையைச் சாடும் தன்மையும் தனித் தமிழில் அமைந்துள்ளமையை அறியலாம்.

சான்றாகச் சில : 'கைத்தூக்கிவிட ஆளில்லை' எனப்புலம்பும் குரலே! கிடைத்ததைப் பற்றிப் படர்ந்து காய்க்கிறதுபார் அவரை. கழக இலக்கியங்களா? எந்தக் கழகத்தது? இலக்கணமா? தூய்மையா? கட்டுப்படுத்தாது நாங்கள் படைப்பாளிகள்.

1. தமிழில் எழுதி, பேசித்தமிழரிடமே காசாக்கிக்கொள் தமிழரையும் தமிழையும் பழித்து! அவர்கள் அறம்.

www.padippakam.com



2. பேரன் பேத்தியர்க்குப் பணக்கார ஆங்கிலப் பள்ளிகள் தமிழை, பண்பைச் சிதைக்கும் இதழ், தொலைக்காட்சி! தமிழர்தலை தாழ்வு.

சுவையும் பயனும் மிக்க சிதறல்களை நூலைப் படித்து அறிக.

சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர். ஆசிரியர் : திரு வே. ஆனைமுத்து முகவரி : 29, முருகப்பா தெரு (மாடி) சேப்பாக்கம், சென்னை - 600005. விலை : உரு - 100/-

ஒரு காலத்தில் தமிழர் இதழ்கள் என்றாலே பொங்கல் மலர்தான் வெளியிடும் நிலை இருந்தது. இன்று செல்வமும் செல்வாக்கும் பெற்றுள்ள முன்னாள் தமிழர்பலர் தாம் நடத்தும் இதழ்களில் பல்வேறு மலர்வெளியிடத் தொடங்கிவிட்டனர். பொங்கல் மலரை மறந்துவிட்டனர்.

அந்நிலையில் முன்னாளைப் போலவே இந்நாளிலும் பொங்கல் மலர் வெளியிட்டுள்ள சிந்தனையாளன் ஆசிரியரை உளம் மகிழப் பாராட்டுக்கிறேன்.

மலரில் தமிழ்வளர்ச்சிக்கு வழிகாட்டும் அரிய கட்டுரைகளைத் தமிழறிஞர்கள் எழுதியுள்ளனர். தமிழுணர்ச்சியூட்டும் கட்டுரைகளையும் பாடல்களையும் தமிழன்பர் பலர் படைத்துள்ளனர், பாதுகாக்க வேண்டிய கருவூலமாக மலர் விளங்குகின்றது. பல்லாண்டுகட்குப்பின் அருமையான பொங்கல் மலரைப் பார்த்த, படித்த மனநிறைவு ஏற்படுகிறது.

- இறைவிழியன்



ஏழாம் வகுப்பு மாணவி கு.அ. தமிழ்மொழியின் சிறகின் கீழ் வானம். (துளிப்பா) நூலினை மாண்புமிகு முதலமைச்சர் ந. அரங்கசாமி, கதிர்காமம் பெண்கள் அரசு மேனிலைப்பள்ளியில் 17-02-2006இல் வெளியிட்டார்.

www.padippakam.com



# நற்றமிழ்க்கு வந்த நன்மடல்கள்

"தமிழ்த் தொண்டு - தொண்டர் அறிமுகம்" எனக்கு வயது 78 நான் நாள்தோறும் தமிழ் மொழிபாதிக்கப்பட்ட தன்மை குறித்துத் தமிழ் நாட்டரசிற்கும், மாவட்ட ஆட்சியர் அவருக்கும் உடனுக்குடன் அஞ்சல் அட்டைமூலம் முறையிடுகிறேன். பின்பு திங்கட்கிழமை குறைதீர்க்கும் நாளில் மாவட்ட ஆட்சியரிடம் நேரில்முறையிடுகிறேன். எடுத்துக்காட்டு

இம்மாத நிகழ்ச்சி : திருச்செந்தூர் திருக்கோயிலில் - ஐப்பசி வளர்பிறை ஆறாம் நாள் திருவிழா - கந்தசட்டி CAR PASS என்று அச்சிடப்பட்டது குறித்து ஆங்கிலத்தில் பெரிய அளவு தமிழில் ஊர்தி அனுமதி சிறிய அளவு. - ச. சண்முகவேல், கொட்டாரக்குறிச்சி.

பொருள் : தமிழ் வளர்ச்சி குறித்து, இப்பகுதித் தமிழ் ஆர்வலர்கள், அரசிற்கும், தமிழ் நாட்டரசிற்கும், மாவட்ட ஆட்சியர் களுக்கும் மெய்வருத்தம் பாராமல் கண் துஞ்சாமல் தொடர்ந்து பல ஆண்டுகளாக முறையிட்டு வருகிறார்கள் என்பது தொடர்பாக திருநெல்வேலி மாநகராட்சி விளம்பரத்தில் வார்டு, அலுவலகம் என்று எழுதப்பட்டிருந்தது. உடனே திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கும் மாநகராட்சி ஆணையருக்கும், தமிழ்நாட்டரசின் சென்னை நகராட்சித் துறை, மண்டலத்துணை இயக்குநர் தமிழ்வளர்ச்சி ஆகியோருக்கும் முறையிட்டுள்ளோம். விரிவானவற்றைப் பின்னர் அனுப்புகிறோம்.
- ச. ஆறுமுகப்பெருமாள், திருவைகுண்டம்.

நாள்தோறும் தமிழ்மொழி பல நிலைகளில், முதன்மைத் தன்மை ஒவ்வொரு நிலையிலும் இழந்து வருவதைச் சுட்டிக்காட்டிடவேண்டும். இந்த உணர்வு குறைந்து வருகிறது. நாங்கள் இப்பகுதியில் உள்ள தமிழ்ஆர்வலர்கள், உடனுக்குடன் அன்பான முறையில் முறையிடுகிறோம்.

எடுத்துக்காட்டாக : திருச்செந்தூர் திருமுருகனின் ஐப்பசி வளர்பிறை ஆறாம் நாள் திருவிழா = கந்தசட்டித் திருவிழாவில், வழக்கமாக CAR PASS - என்று ஆங்கிலத்தில் மட்டுமே வருடந்தோறும் அச்சடிக்கப்படும். நாங்கள் தொர்டர்ந்து முறையிட்டோம். இந்த வருடம் ஊர்தி அனுமதிச்சீட்டு என்று தமிழிலும் CAR PASS-என்று ஆங்கிலத்திலும் எழுதியுள்ளனர். - சு. அருண்பாண்டியன், திருவைகுண்டம்.

தாங்கள் அன்புடன் அனுப்பிவைத்த 'நற்றமிழ்' கிடைக்கப் பெற்றேன் மிக்க மகிழ்ச்சி. மொழி இலக்கணத்தை இலக்கியம்போல் எளிமையாகவும், செழுமையாகவும் சிறப்பாகத் தருகிற இதழ் 'நற்றமிழ்' என்பது அதனைத் தொடர்ந்து படித்து வருவதன் மூலம் என்னால் நன்கு அறிந்து கொள்ள முடிகிறது. இதழின் ஒவ்வொரு பக்கத்திலும் நீங்கள் இருக்கிறீர்கள். உங்கள் உழைப்பு இருக்கிறது. கூடவே உயர்வான தமிழும் இருக்கிறது. 'நற்றமிழ்' நாளைய இலக்கிய வரலாற்றில் புதுச்சேரியின் பெருமையைப் புகழ்படச் சொல்லும்.

'சாலையூரில்' தங்களுக்காக ஏற்பாடு செய்திருந்த விழாவில் என்னைப் பேச அழைத்து அனுமதி அளித்தது தங்கள் 'நயத்தகு நாகரிகத்தைக் காட்டுகிறது. தாங்கள் உள்ளும் புறமும் ஒரே தன்மையுடையவர் என்பதை மீண்டும் ஒருமுறை எனக்கு உணர்த்தியி

படிப்பகம்

www.padippakam.com



ருக்கிறீர்கள். நன்றி. தங்களின் தகைமை வாய்ந்த பண்புநலம் எல்லோர் இதயங்களிலும் வந்து சேரட்டும். நாம் 'தமிழர்களாய்' இருப்பதைப் போலவே 'மனிதர்களாய்' இருப்பதிலும் பெருமை கொள்வோம்.

- பாரதி வசந்தன், புதுச்சேரி.

நற்றமிழ் 2037 மீனம் இதழ் படித்தேன். வேற்றுமையில் ஒற்றுமை மக்களவையில் பிப்பிரவரி 21ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாகக் கொண்டாடப்பட்டது. வங்காள நாட்டினரின் புண்ணியத்தில் நடந்தது நமக்கு மகிழ்ச்சி தான். வங்கமொழியினருக்கு முன்னோடியாகத் தமிழர்கள் தம் மொழிப்போரை 1937 இலேயே தொடங்கிவிட்டனர். தமிழர் பலர் தம் இன்னுயிரைத் தமிழ்வாழ்க என்று கூறியபடி தீக்கு இரையாக்கினர். திராவிடம் அதை அரசியலாக்கி ஆட்சிக்கு வந்தது. இன்றைக்கு நாடாளு மன்றத்தில் 40 உறுப்பினர்களைக் கொண்ட தமிழர்கள் தமிழ் மறவர்களை. வசதியாய் மறந்துவிட்டுக் குளிர்காய்கின்றனர். - அருவை. தமிழன்பன்.

மதிப்புயர் அய்யா வணக்கம்! மீனம் இதழ் 'நற்றமிழ்' படித்தேன். நனி நன்று! 'வேற்றுமையில் ஒற்றுமை' தங்கள் உரை மிக நன்று! தங்கள் சொந்த மொழியில் பேசுவதில் உறுப்பினர்கள் எவ்வளவு மகிழ்ந்துள்ளார்கள் எனும் போது நம் மனமும் மகிழ்கிறது! நம்மவர்கள் ஒருவர் கூட அனைத்து வளமும் நிறைந்த நம் தமிழ் பற்றி முறையாக சரியாக எடுத்துரைக்கவில்லையே எனும் போது மிகவாட்டமாகத்தான் உள்ளது கொஞ்சம் மெத்த படித்திட்டாலே தாய்மொழியைப் புறக்கணிக்கும் பழக்கம் நம்மவர்களுக்கு நிறையவே உள்ளது. மற்ற மொழியினரை விட இங்கே சொந்த மொழியைப் புறம்தள்ளும் போக்கு அளவுக்கு மீறியே வளர்ந்து வருகிறது! நற்றமிழின் தமிழர் நலப்போக்கு வரவேற்க வேண்டிய ஒன்றாகும். - ச. நாத்திக நந்தனார், சென்னை.

தற்போதைய புதிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவினர் நம்மையும் சேர்த்துத்தான் (110) கக0 கோடியாகும். ஒருவர்க்கு ஓர் அஞ்சலட்டை 25 காசு செலவு என்றாலும் மொத்தத்தில் 25 கேடி செலவு என்றாலும் மொத்தத்தில் 25 கோடி செலவு நட்டம். ஏன் இந்தி வளர்க்க! ஏன்என்றால் ரு0 காசு அஞ்சலட்டையை உரு காசுக்கு விற்கிறது! தமிழரசு என்ன செய்கிறது? நாம் என்ன செய்கிறோம்? தமிழ் வாழ்க! வளர்க! என்று கூச்சலிட்டால் போதுமா? செயற்பாடு என்ன? சொல்லுங்கள் இணைந்து செயல்பட!

- பித்தளை வணிகன் மதுரை மாறன், திண்டுக்கல்.

நற்றமிழ் இதழ்தோறும் வெளிவருகின்ற போட்டிப் பாடல்கள் யாவற்றையும் தொடர்ந்து படித்து வருகிறேன். பாடல்களுக்கு இலக்கணம் தேவை என்பதை மறுப்பவனல்ல நான், என்றாலும் இன்று வரையில் 'இலக்கணம்' எனும் 'அரசி' எனைத் தழுவிடத் தயங்குகிறாள். இதனால் தமிழ்ப்பா எழுதிடாமல் இருந்திட இயலவில்லை என்னால் எழுதிக்கொண்டே இருக்கிறேன். இதற்கு ஆக்கமும் - ஊக்கமும் தரும் வகையாகத் 'திருத்தங்களுடன்' என்போன்றோரின் பாடலை வெளியிட்டால் திருத்திக்கொள்ள - வளர்த்துக்கொள்ள வழிபிறக்கும் என்பது எனது வேண்டுகோள். நிறைவேறுமா?- ப. சமர்க்கி. பெங்களூர்.

www.padippakam.com



தொடுத்துள்ள வினாக்களுக்கு விடுத்துள்ள எடுத்துக்காட்டு களுடன் இலங்கிய விடைகள் எடுத்துக் கொள்ளும்படி இருந்தன. தமிழுக்குத் தன்னை அர்ப்பணித்த திருமகனார் வி.பொ.ப. வின் தனித்தமிழ்ப் பற்றும் பகுத்தறிவு நோக்கும் பொதுவுடைமை இலக்கும் நெஞ்சம் ஈர்த்தன. அத்தடம்புரளாத்தங்கம் என்றும் புகழுடம்பில் ஒளிரும். - புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி.

இம்மாதத்திங்களிதழ் கிடைக்கப்பெற்றேன். தலையங்கத்தில் 'உலகமே வியக்குமளவில் தமிழுக்காகத் தீக்குளித்த தமிழ் மறவர் - மாணர்வகளை 40 நாடாளுமன்ற உறுப்பினருள் ஒருவரேனும் உரைத்தனரா?' என்ற வரிகள் உலுக்கின. திரும்பத்திரும்ப வாசித்து அழுதேன். என்னால் இயன்ற அஞ்சலி அதுவே! தீக்குளித்தோரின் வாரிசுகளுக்குத் தொகுதிப்பங்கீடு அளித்திடுவது அரசின் தலையாய கடமை! அத்துமீறும் தேர்தல் உரிமைகளில் மறந்துபோகும் கடமையாக ஆகிவிட்டது பெருந்துயரே. நமது வங்காளப்பங்காளிகள் நல்ல வழிகாட்டிகள்! காலங்காலமாக நம் முதுகில் ஏறிக்கையாட்டி - விளம்பரம் தேடுவோரை வீழ்த்துவோம் - தேர்தலில்!

தெ. முருகசாமி இயற்றிய வாழ்த்துப்பாவில் தெளிதமிழாசிரியர் திருமுருகனாரும். திரைப்பட இயக்குநர் விசுவும் தங்களைப் போற்றிய விதம் பெருந்தன்மையானது. மறைமலைநகர் வாழ் பன்மொழிப் புலவர் சொ. ஞானசம்பந்தனா ருடன் பல்லாண்டுகள் கடிதத் தொடர்பு கொண்டு, ஒருசில மொழிகளைக் கற்க முடிந்தது. ஐயந்திரிபற எழுதும் சான்றாளர்! அவர்தம் 'பிரெஞ்சு இலக்கிய வரலாறு', 'தமிழ் உரைநடையின் தரம் உயர...' நூல்கள் ஒப்பற்றவை. நட்புறவின் நினைவாக இன்றும் இல்லநூலகத்தில் விளையாடும் வாய்ப்பினைப் பெற்றேன்.

- சு. வேல்மணி, ஆசிரியர்.

தமிழ் நாட்டின் வார இதழ்கள் பணம் ஒன்றையே குறியாகக் கொண்டு, நடிகைகளின் படங்களைப் பக்கம் பக்கமாகப் போட்டு முதல் எண் (நெ.1) வாரஇதழ் என்று வாசகர்களைத் தடுமாறச் செய்கின்ற இந்நாளில் புதுவையில் "நற்றமிழ்" தமிழ் வளர்ச்சி ஒன்றையே குறியாகக் கொண்டு கொள்கை வழி நடத்தப்பட்டு வருகின்றது. நற்றமிழ் ஆசிரியர் இறைவிழியனார் போன்ற நல்ல தமிழர்கள், மொழிப்பற்றாளர்கள் தமிழகத்தில் தோன்றவேண்டும். தமிழை வளர்க்க வேண்டும்.

- மணிஅரசு க. நாராயணசாமி, பழமாத்தூர்.

## அ. பசுபதியாரின் மடல்

அன்பும் பண்பும் மிக்க ஐயா அவர்களுக்கு, வணக்கம். புதிய 'நற்றமிழ்' கிடைத்தது. மிக்க நன்றி. தமிழ்மாமணி விருது தங்களை வந்தடைந்ததைக் கேள்வியுற்றவுடன் (நண்பர் இ. செயராமன் சொன்னவுடன்) தொ.பே. செய்து தங்களை வாழ்த்திப் பேசினேன். இப்பொழுது - http://360.yahoo.com/pasu2tamil என்னுமென் வலையிதழிலும், http:/www.thamizmanam.com என்ற, முப்பது நிமையத்துக்கொருமுறை புதிய பதிவேற்றம் நிகழும் மின்னிதழிலும், http://kalapathy.blogspot.com என்ற எம் வலைப்பூவிலும் தாங்கள் 'தமிழ்மாமணி' விருது பெற்றது தகுதியால் மட்டுமே என்பதை நற்றமிழ் நளி இதழ் தரவுகள் கொண்டு பதிவிட்டு உள்ளேன் பார்க்கவும்.

www.padippakam.com



# செந்தமிழ் வளர்க்கும் செய்திகள்

❖ 10-3-2006 அன்று மாலையில் மீட்பரின் அன்னை இல்லத்தில் செந்தமிழர் இயக்கத்தின் சார்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் பிறந்த நாள் விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில் தமிழ்தமிழர் இயக்கத் தலைவர் திரு தியாகு கருத்துரை வழங்கினார்; புதுச்சேரி அரசின் தமிழ் மாமணி விருது பெற்ற புலவர் மு. இனைவிழியனார் கலைமாமணி விருது பெற்ற புலவர் பூங்கொடிபராங்குசம், உந்துவண்டிகளில் தமிழில் பதிவெண் எழுதியுள்ள தமிழன்பர்கள் சிறப்பிக்கப்பெற்றனர்.

❖ 10, 11-3-2006 ஆகிய இரு நாட்களில், புதுவைப் பல்கலைக் கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலமும், விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியும் இணைந்து உலக அமைதிக்குத் தமிழ் இலக்கியங்களின் பங்களிப்புப் பற்றிய பன்னாட்டுக் கருத்தரங்கத்தைச் சிறப்புற நடத்தின. தமிழறிஞர் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

❖ 12-3-2006 அன்று மாலை புதுச்சேரி இராம் உணவகத்தில் இளைஞர் அமைதி மையம் சார்பில் 'அன்னை கோவிந்தம்மாள் இலக்கிய விருது வழங்கும் விழா இனிது நடைபெற்றது. விருதுபெற்றவர் திருமதி மணிமேகலை - கண்ணன். விழாவில் புதுச்சேரிச் சட்டப்பேரவைத் தலைவர் ம.தெ.இரா. இராமச்சந்திரன், புதுச்சேரி முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி எதிர்கட்சித் தலைவர் சானகிராமன், அமைச்சர் மாண்புமிகு ஆ. நமச்சிவாயம் சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்ச்சான்றோர் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர் தமிழ் மாமணி புலவர் அரிமதி தென்னகன், மருத. இராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் விழா நடந்தது.

❖ 12-3-2006 ஞாயிறன்று திலசையில் புலவர் ந. ஆதிகேசவன் எழுதிய "பூங்கொத்து", "பிள்ளையார் பாமாலை" ஆகிய இரண்டு நூற்களைப் புதுச்சேரி முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி வெளியிட்டார். விழாவில் எதிர்கட்சித் தலைவர் சானகிராமன், அமைச்சர் மாண்புமிகு ஆ. நமச்சிவாயம் முனைவர் இரா. திருமுருகனார், புலவர்கள் : அரங்கநடராசன், இ. பட்டாபிராமன், நாகி, சீனு. இராமச்சந்திரன், பூங்கொடிபராங்குசம், அ. அன்பரசு இ.ஆ.ப., சு. வேல்முருகன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப் பித்தனர்.

❖ புதுச்சேரி, மீனாட்சிப்பேட்டையில் உள்ள பெரியவர் ந. சாமிநாதன் நினைவுப் பள்ளியின் ஒன்பதாம் ஆண்டுத் தொடக்க விழா 15-3-2006 அன்று காலை பள்ளித்திடலில் பேரா. ம. இலெ. தங்கப்பா தலைமையில் செந் தமிழ் அறக்கட்டளைச் செயலர் திரு ந. மு. தமிழ்மணி வரவேற்க, திரு சீனு அரிமாப் பாண்டியன், திரு ந. துரைசாமி, திரு சா. நெடுஞ்செழியன் திரு மு. தேசிகன் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகத் தமிழ்மாமணி புலவர் மு. இறைவிழியனார், புலவர் செ. இராமலிங்கன் கலந்து கொண்டனர். பள்ளி மாணவர்கள் நடத்திய

படிப்பகம்

www.padippakam.com



கலைநிகழ்ச்சிகள் அனைத்தும் இனிய விருந்தாக அமைந்திருந்தன. சான்றோர் பெருமக்கள் பள்ளியின் சார்பில் மாணவர்க்குப் பரிசுகள் வழங்கினர். பள்ளித் தலைமை ஆசிரியர் த. மோகனின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

✤ பாவலர் செவ்வியனின் **"சிதறல்கள்"** கவிதை நூல் வெளியீட்டு விழா 25-3-2006 அன்று விழுப்புரத்தில் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கச் சார்பில் சிறப்பாக நடைபெற்றது. **"ஏற்றம் புரிய வந்தாய்"** எனுந்தலைப்பில் நடைபெற்ற பாட்டரங்கில் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பாவலர்கள் பெரும்பான்மையோர் பங்கேற்றுப் பாடி விழாவைச் சிறப்பித்தனர்.

## பாவலர் அன்பு நிலவனார் வாழ்க!

புதுச்சேரி வானவில் நகரைச் சேர்ந்த நற்றமிழன்பரும் பணிநிறைவு பெற்ற தலைமையாசிரியரும் சிறந்த பாவலருமான திரு அன்பு நிலவனார் அவர்கள் 29-03-2006 அன்று தம் 69ஆம் அகவையை நிறைவு செய்துள்ளார். அந்நாளின் நினைவாக 'நற்றமிழ்' வளர்ச்சிக்கு உரு100/- கொடையாக வழங்கியுள்ளார். பாவலர் நலமும் வலமும் பெற்றுவாழ நற்றமிழ் வாழ்த்துகிறது. - ஆசிரியர்.

## வருகிறது தேர்தல்!

வருவார் அரசியலார் வாக்குதமைக் கேட்டே
தருவாரே வாக்குறுதி தானே! - ஒருமனதாய்
சிந்தித்தே ஆராய்ந்து சீர்மிகு நல்லாட்சி
வந்திடவே வாக்களிப்போம் நாம்!

மக்கள் நலனை மனத்தினில் கொள்வோர்க்கே
எக்கணமும் வாக்களிக்க எண்ணுவோம்! - மக்களின்
தீர்ப்பொன்றே மேலான தீர்ப்பென்று வந்திடும்
தேர்தலில் காட்டுவோம் தேர்ந்து!

- கவிஞர் அ. கனகசபாபதி, தென்கீரனூர்.

## புலவர் செ. வரதராசனார் மடல்

தங்கட்குப் புதுச்சேரி அரசு "தமிழ்மாமணி விருது வழங்கி இருக்கும் சிறப்பறிந்து மகிழ்கின்றேன். 8-01-2006 ஞாயிறன்று தங்கட்குப்பாராட்டு விழா, நூல் வெளியீட்டுவிழா! தங்கட்குத் 'தமிழ்மாமணி விருது வழங்கிய முதல்வர் மாண்புமிகு ந. அரங்கசாமி அவர்களின் சிறப்புரை. விழாக் கவியரங்கிற்கு நமது நண்பர் புலவர் திரு பெ. சயராமன் அவர்களின் தலைமை இவ்வாறான சிறப்பமைந்த தங்கள் பாராட்டுவிழா மகிழ்வுற நிறைவுறுக! தாங்கள் நெடிதினிது பல்லாண்டு வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறேன். பொங்குக தங்கள் புகழ்!

படிப்பகம்

www.padippakam.com

AIR MAIL

விலை உரு 6.00

நற்றமிழ்-திங்களிதழ் — பதிவு எண். புது.த.தி./2000/4265

NATRAMIZH-MONTHLY — Registration No. PONTAM / 2000 / 4265

அஞ்சல் உரிமம் : த.நா / அ.து.த 128 / 06-08. திங்கள் தோறும் 15 / 16ஆம் நாளில் நெல்லித்தோப்பு அஞ்சலகத்தில் சேர்க்கப்படுகிறது.

Postal registration : TN/PMG (CCR) / 128/06-08. Posted at NELLITHOPE POST OFFICE On 15th / 16th of Every Month.

**அச்சிட்ட நூல் அஞ்சல் - Printed Book Post**

**LICENSED TO POST WITHOUT PREPAYMENT UNDER WPP NO. SSP / PY / 128 / 06-08**

பெறுநர் :

திரு.

**N. MURALY**
Dysse garden - 24, T.V,
7500 Holstebro,
**Danmark.**







| | | |
|---|---|---|
| தனி இதழ்க் கட்டணம் | — உரு | 6.00 |
| ஆண்டுக் கட்டணம் | — உரு | 75.00 |
| வெளிநாட்டு ஆண்டுக் கட்டணம் | — உரு | 300.00 |
| வாழ் நாள் கட்டணம் | — உரு | 600.00 |

திரு. ந. இளம்பூரணன் அவர்கட்கு உரிமையான 17, முதல் தெரு, இராசய்யர் தோட்டம், புதுச்சேரி - 605 013. இல் உள்ள அகத்தியர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, நற்றமிழ் உரிமையாளரும் ஆசிரியருமான புலவர் மு. இறைவிழியனாரால் 43, அங்காடித் தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605 005. என்கிற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது. தொலைப்பேசி : (0413) 2203765 கைப்பேசி : 98942-25129

Printed by **N. Elampuranan,** Owner of the press and published by **M. Iraivizhiyan** on behalf of **M. Iraivizhiyan** and printed at AHATHYAR PRESS, 17, First Street, Rajaiyer Thottam, Pondicherry - 605 013. and published at 43, Market Street, Nellithope, Pondicherry - 605 005. Editor **M. Iraivizhiyan,** Telephone : (0413) 2203765 **Cell : 98942 - 25129**

படிப்பகம்